ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. பிரமோதூத ஹு புரட்டாசி மீ பகுதி ௯.
Vol 7. September & October 1930. **No. 9.**

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான்
வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(197-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, திரௌபதி தமயந்தி என்ற இவ்விருவரின் அத்யவஸாயத்தின் தாரதம்யம் நிரூபிக்கபபெறும்.— இவர்களின் தாரதம்யத்தையறிந்துகொள்வதற்கு ஹேதுவாயிருக்கின்ற ஓர் முக்ய விஷயம் முன்னதாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அது வருமாறு.—

இங்குக்குறிப்பிடப்பட்ட பதிவ்ருதைகள் தமக்குரிய தர்மங்களை அநந்யப்பிரயோஜனமாக அநுஷ்டித்து அக்ஷயபலமான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை விரும்பினார்கள் என்று சொல்வதற்கில்லை. பாதிவிருத்ய தர்மத்தைக் குறைவற அநுஷ்டித்தவர்கட்கு ஸ்வர்க்க லோகத்தில் தம் பர்த்தாக்களுடனிருந்து சுகாநுபவஞ் செய்வதே பலமாகச்சொலலப்பட்டது. ஸ்வர்க்கத்தில் "தேவாநாம்பசு" என்றபடி தேவர்கட்குக் கிரீடாமிருகங்களாய் (விளையாட்டுக் கருவிகளாக ஏற்பட்ட குரங்குகளைப்போல) அவர்களின் இச்சாநுகுணமாக நடந்து கொள்ளக்கூடியவர்களாக இருப்பதுவே பதிவிருதைகளின் பர்த்தாக்களுக்குரிய பலமாக உரைக்கப்பட்டுளது.

இந்திரன் இந்திராணியுடன் கொலுவீற்றிருக்கும்போது இவர்கள் இந்திரனுடைய ஆணையின்படி காரியங்களைச்செய்து அவன் மகிழ்ச்சிக் குறிப்பாகத் தாழ்ந்தவிடங்களிலிருப்பார்கள். இவர்கள் விருப்பத்திற்கு விஷயமாகிய அப்ஸரஸ்திரீகட்கு இந்திரன் ஏதேனும் ஆணையிட்டானாகில் அதையவர்கள் செய்துமுடித்த பிறகே இவர்கள் அவர்களோடுகூடி அநுபவிக்கவேண்டும். இந்த ஸ்திரீகட்கு இந்திரஸபையில் நடனஞ்செய்ய நேர்ந்ததால் அது சமயம் இவர்கள் அவர்களோடு கூடியிருத்தற்கியலாது. மேலும், இந்திரஸபையில் இந்த ஸ்திரீகள் அவனுக்குத் திருப்திக்குறையுண்டாகும்படி நடந்துகொள்ளுமாறு நேர்ந்தால் 'இந்த ஸ்திரீகள் இந்திரனுடைய கோபத்திற்கிலக்காகாமல் தப்பிக்கப்பெறுவர்களோ' என்று இவர்கள் பெரிதும் வருந்தி அந்த ஸபை முடிவுபெறும் வரை ஆங்கு நிகழ்கின்ற ஆநந்தங்களைத் துக்கக்கலப்புடன் அநுபவிப்பார்கள். எவ்விதத்தானும் இவர்கட்கு ஆங்கு ஸ்வதந்தரமான அநுபோகமென்பது சிறிதுமில்லை. இதுபோலவே பதிவ்ருதைகளாயிருபபவர்கட்கும் ஆங்கு ஸ்வதந்தரமான அநுபோகமென்பதில்லை. மேலும் இந்தப் பதிவ்ருதைகட்கும், இவர்கள் பர்த்தாக்கட்கும் இந்திரலோகாநுபவம் ஏற்படுவது இந்த மானிடயாக்கை கழிந்தபிறகேயாம். இந்த யாக்கையோடே அவ்வநுபோகம் ஏற்படுவதில்லை.

தமயந்திக்கோவென்னில், இந்தச் சரீரத்துடன் இந்திராணியின் பக்கத்திலிருந்துகொண்டு அங்குவரும் அரசர்களைத்தானுமடிமைகொண்டு நடத்தும் பெருமை இந்திரனைப் பர்த்தாவாகக் கொள்ளும்போதே நேரக்கூடியதன்றோ! இந்த ஐசுவர்யத்தை இவள் வருந்திப் பெறவேண்டுமென்பதிலலையே; இவள் இதனைப்பெறுவதற்கு இந்திரன் தானாகவே வந்து முடிசாய்த்தானன்றோ! இந்திரன் பெருமைக்கீடான சரீரதோற்றத்தையும், நளனது மானிடயாக்கைக்குரிய சரீரதோற்றத்தையும் இவள்நேரிற்கண்டறிந்தவளன்றோ! இங்ஙனமிருக்க நளனை வரிப்பதிற்கொண்ட மனவுறுதி இவளுக்குச் சிறிதும் மாறவில்லையே. மயங்கினளென்பதும் ஆலோசனை செய்தாளென்பதுமில்லை.

இஃதிங்ஙனமிருக்க, இனி திரௌபதியின் நிலைமையை ஆராய்வோம்.—

திரௌபதியை துருபதன் அர்ஜுனனுக்குக் கொடுக்கவேண்டுமென்று அருந்தவஞ்செய்து பெற்றான். இவன் அர்ஜுனன் அரக்கு மாளிகையில் மாண்டானெனக்கேட்டதும், அதை நம்பாமல் 'எப்படியும் அவன் தப்பியேயிருப்பான்; அவனைக்கண்டறிய வேண்டும்' என்ற எண்ணங்கொண்டு 'இவ்வில்லை வளைப்பது அவனன்றிப் பிறரொருவருக்குமாகாத செயலாம்' என உறுதியுற்று ஸ்வயம்வரம் ஏற்படுத்தினான். திரௌபதி பாதிவ்ருத்யத்தில் ஊற்றமுடையவளாயிருப்பாளாகில் அர்ஜுனனைக்காட்டிலும் ஒரு வீரன் இருப்பானேல் அவனும் இவ்வில்லை வளைக்கக்கூடும்; ஆகையால் அர்ஜுனனைக் கண்டறிய வேறுவழி தேடவேண்டும் என்று ஸ்வயம்வரத்தைத் தடுத்திருத்தல் வேண்டும். இவ்வாறு செய்தாளில்லை. துருபதனைப்போல் 'அர்ஜுனனே இவ்வில்லை வளைப்பதற்குச் சக்தன்' என்ற துணிவு இவளுக்குண்டானதாகக் கொள்வோம். கர்ணன் வில்லை வளைக்கப் புகுந்த காலத்து, அவன் வில்லை வளைப்பதற்கு முன்னமே அவனைக்கண்டதும் இவளுக்கு அவனிடம் ஆசையுண்டாயிற்று. பின்பு அவள் தேர்ப்பாகன் மகன் என்று தெரிந்து, 'அவன் வில்லை வளைத்தாலும அவனுக்கு மாலையிடமாட்டேன்' என்றாள். இதில் இரண்டு தோஷங்களிருக்கின்றன. கர்ணனது அழகமைந்த வடிவைக்கண்டு ஆசைகொண்டது முதல் தோஷமாம். தகப்பன் 'வில்வளைத்தவன் யாராகிலும் அவன் இவளுக்குரியவன்' என்று சொல்லியிருக்க, அதுக்குமாறாகத் தகப்பனுக்குப் பரதந்த்ரையாயிருக்கும் நிலை குலைந்து 'கர்ணனுக்கு மாலையிடேன்' என்று சொல்லியது இரண்டாவது தோஷம்.

இதுநிற்க; அர்ஜுனன் வில்லை வளைத்தவுடன் இவள் மாலையிட அவன் இவளுடன்கூடி குடிசைபுகுந்தபோது இவளைக்கண்ட தர்மபுத்திரர் 'இவள் ஐவருக்குமுரியவள்' என்று சொல்லக்கேட்டவள் 'ஒருவனை மாலையிட்ட நான் மற்றையாருக்கும் உடன் படுவது தகுதியோ? இது நாட்டிற்கண்டதில்லையே' என்று தடுத்தாளில்லை. தர்மபுத்திரர், 'என்மனம் தர்மத்தை விட்டகலாது; அப்படிப்பட்ட

மனம் 'இவள் ஐவருக்கும் உரியவள்' என்று கருதுகிறபடியால் இது இவளுக்குத் தர்மமேயாம் என்று சொன்னபோது இவளுக்கு அந்த உறுதியுண்டானதாகச் சொல்லவுமில்லை. வியாஸர்வந்து 'இது இவளுக்கு அஸாதாரண தர்மம்; அப்படியேசெய்யவேண்டும்'எனச் சொல்வதற்கு முன்பே துருபதனுக்குச் சந்தேகமுண்டானதாகச் சொன்னதுபோல இவளுக்குச் சந்தேகமுண்டானதாகச்சொல்லவுமில்லை. ஆகையால் இவள் ஐவர்களையும் பர்த்தாக்களாகக்கொள்ள ஆசைகொண்டவளே. தர்மபுத்திரர் வார்த்தையைத் தன் கருத்திற்குத்துணையாகக்கொண்டவள். இதுசமயம் திரௌபதியை நோக்கி 'இதுவிஷயத்தில் உன் கருத்தென்ன?' என்று எவரேனும் வினவியிருப்பரேல் 'தர்மத்தில் உறுதியுள்ள தர்மபுத்திரர் அப்படிச்சொல்லியிருக்க அதில் சந்தேகம் ஒன்றுமில்லையே' என்று மரியாதையாக இவள் தன்னுடைய ஆசையை வெளியிட்டிருப்பாள். கேட்பாரில்லை. மேலும் ஐந்து பர்த்தாக்கள் எனக்குளர்; ஆறுவதாக ஒராடவனையும் என் மனம் விரும்புகிறது. ஆகையால் புருஷர்கள் கிடைக்காவிடில் எல்லா ஸ்திரீகளும் பதிவ்ருதைகளேயாவர்' என்று அவள் சொன்னதாக ஒரு சுலோகமுமிருக்கிறது.

இஃதெல்லாமலும், உத்யோகபர்வத்தில் ஸ்ரீகண்ணன் தூது எழுந்தருளிமீண்டபோது கர்ணனைத் தேறிலேற்றிக்கொண்டு பாண்டவர்களோடு உறவு செய்தற்குவேண்டிய வார்த்தையாடிக்கொண்டு வந்தபோது தர்மபுத்திரர் உனக்குத் தம்பியாவர்; அவருடன் கூடியிருப்பையாகில் ராஜ்ய உரிமை உனக்கேயாம்; மேலும் திரௌபதியோடு கூடியனுபவிக்குமுறை உனக்கும் ஒரு வருஷம் நேருமென்று சொன்னார். இதனால் வியாஸர் 'இவள் ஐவருக்குமுரியவள்' என்று சொன்னதும், கர்ணனுக்கும் திரௌபதியை அநுபவிக்கும் யோக்யதையுண்டென்று கண்ணன் கருதியதும், ஸ்வயம்வர காலத்தில் கர்ணனைக்கண்டு இவள் கலங்கியதும், கர்ணனை ஆசைகொண்டது காரணமாக இவள் ஆறுவது புருஷனிடம் அபேக்ஷையுண்டாகிறதென்று சொன்னதும், இவள் ஜந்மாந்தர விருத்தாந்தமறிந்த வியாஸர் முதலிய பெரியோர்கள், 'இது இவளுக்கு அஸாதாரணதர்மம்; பாதிவ்ருத்ய தர்மத்திற்குத் தோஷமாகாது' என்று நிர்ணயித்ததுமெல்லாம் ஸம்பவமானலும் இவளுடைய பாதிவ்ருத்யத்தால் ஏற்

படும் பெருமைக்குக் குறைவே யாம். ரத்ன பரீக்ஷகர்கள் இவை தோஷமுடையனவல்ல; ஆனாலும் குணம் போதாது; இவைகள் தோஷமுடையவல்ல; குணங்களுடையன என்று சொல்வதுபோல, திரௌபதி எவ்விடத்திலாவது 'என்னுடைய பாதிவ்ருத்ய தர்மம் உண்மையானால் இது இப்படியாகக் கடவது' என்று சபிக்க, அதன்படி அச்சாபம் பலித்தது என்ற பிரஸ்தாபமில்லை. ஆதலால் திரௌபதியின் பாதிவ்ருத்யதர்மம் அத்துணைச் சிறந்ததில்லை என்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

திரௌபதியின் பாதிவ்ருத்யத்தின் அத்யவஸாயத்தைக் காட்டிலும் தமயந்தியின் பாதிவ்ருத்யத்தின் அத்யவஸாயம் மிகவும் வலியுடையதென்று கொள்ளவேண்டும். தமயந்தியின் பாதிவ்ருத்ய மஹிமையன்றோ 'தம் வடிவைப் பிறரறியலாகாது' என்று சூழ்ச்சி செய்துகொண்டிருந்த இந்திராதியரின் உண்மைவடிவைக் காட்டிக் கொடுத்தது. வேடன் சாம்பலாகும்படியும், காட்டானை கதறியோடும்படியுஞ்செய்தது அந்த மஹிமையல்லவா. இந்திராதியர்கட்கும் அதிபனான கண்ணபிரான் திரௌபதிக்குக் கையாளாய் நின்றதிலை தமயந்தியின் பெருமையைக்காட்டிலும் மேலானதாகக் கொள்ள வேண்டுமன்றோ வென்னில்; அல்பானுகூலயமுள்ளாரிடத்திலும் விசேஷ பரீதியைச்செலுத்துவது எம்பெருமானுடைய சிறந்தகுணமாதலால் அவன் திரௌபதியின் வசப்பட்டிருந்தான். இதுபற்றி திரௌபதிக்கோர் பெருமை சொல்வதற்கியலாது. இவளுடைய சக்திவிசேஷத்தைக்கண்டு கண்ணன் இவளுக்குக் கையாளாக இருந்தான் என்று கொள்வதற்கிடமிருந்தால் அதுபற்றி இவளுக்கோர் பெருமை சொல்லலாம். அப்படிக்கொள்வதற்கில்லை. ராஜஸ தாமஸ தெய்வங்கள் மயங்கவேண்டுமானால் அதுக்குச் சக்தி விசேஷம் வேண்டும். ஆகையால் தமயந்தியின் அத்யவஸாயம் மேன்மையுடையதேயாம்.

இனி, சாவித்திரியின் தன்மையை ஆராய்வோம். சாவித்திரியென்பவள் சாவித்ரிதேவியின் அநுக்ரஹத்தாலபிறந்தவள். ரூபாதிகளால் சிறந்தவள். நாட்டிலுள்ள எல்லாரிலும் உயர்ந்தவள். இவளை ஆசைகொண்டு வரிக்கவந்த அரசர்களெல்லாம் இவள்ரூபத்தையும்,

குணத்தையுங்கண்டு வெட்கமுற்று 'நாம் இவளுக்குத் தகுதியற்றவராவோம்' என்று விலகினர்கள். இதுகண்ட அவள் பிதாவாகிய அரசன் அவளைநோக்கி, 'பெண்ணே! உன்னை மணந்துகொள்வார் ஒருவருமில்லை; நீ சென்று உனக்கிஷ்டமான புருஷனைக்குறிப்பிட்டு என்னிடஞ் சொல்வையானல் நான் அவனைப்பற்றி யோஜித்து மணத்தை முடிப்பேன்'என்று சில மந்திரிகளுடன் அவளை வெளியிலனுப்பினன்.

சாவித்திரி நாடெங்குஞ்சென்று காட்டையடைந்து ,அங்கு வேற்றசர்களால் துரத்தப்பட்டு நாட்டையும் கண்களையுமிழந்து பத்னியுடன் பரிதபித்துக்கொண்டிருக்கும் அரசனுடைய மகனுகிய ஸத்யவான் என்பவனைக்கண்டாள். 'இவனே நமக்குத் தகுதியான நாயகன்' என்று தன்னுள்ளத்திற்கொண்டு தன் தகப்பனிடம் வந்து சேர்ந்தாள். அதுசமயம் இவள் தகப்பனிடம் வார்த்தையாடிக்கொண்டிருந்த நாரதபகவான் அரசனை நோக்கி 'இவள் எங்குச்சென்று வருகிருள்' என்று வினவினர். அரசனும் உண்மையானவிஷயத்தைக் கூறினன். அப்பொழுது நாரதர் ஸாவித்திரியை நோக்கி, 'நீயாரைக் கணவனுகவரித்து வந்தனை? அவனைக்கூறுவாய்' என்று கேட்டார். அவளும், 'ஸ்வாமீ! ஸத்யவானை எனக்குரிய நாயகனுகக் கருதினேன்' என்ருள். நாரதர் ஐயோ! பாபம் இவள் தெரியாமல் செய்தகாரியம். அவன் வேண்டாம் எனக்கூறினர். அப்பொழுது அரசன் நடுநடுங்கி, 'ஸ்வாமீ! அவன் அறிவிலியோ? அறமற்றவனே? நெறியற்றவனே?' என்று வினவினன். நாரதர் 'அவன் அறிவிற்சிறந்தவன்; அறத்தில்உயர்ந்தவன்; கொடையில் தக்கவன் இவை முதலியவற்ருல் அவனுக்கோர் குறைவில்லையேனும் ஆயுள் விஷயத்தில் மாத்திரம் அவனுக்குக் குறைவுண்டு. இன்னும் ஒரு வருஷமாத்திரந்தான் அவன் இப்புவியில் ஜீவித்திருப்பான்.' என்றனர்.

இங்கு ஒரு விஷயம் ஆராயத்தக்கதுண்டு.— நாரதர் ஸத்யவானைப்பற்றிக் கூறிவருகின்றபோது அவன் கொடைவளமுடையானென்று கூறினர். ஸத்யவானென்பவன் நாடு முதலியவற்றையும் தண்களையுமிழந்து மிக்கப் பரிதாபமுற்றிருக்கிற தாய்தந்தையர்களு

டன் காட்டிலிருக்கின்றான். இந்த நிலையில் அவனிடத்தில் என்ன கொடைச்சிறப்புக் காணப்படும்? நாரதர் கூறியது பொய்யோ வென்றால்; அஃதில்லை. ஸத்யவான் கொடைவிஷயத்தில அத்யவஸாயமுடையவன் என்பதுபற்றிக் கூறினர். அநுஷ்டானத்திலும் அத்யவஸாயம் சிறந்ததன்றோ!

இதுநிற்க; நாரதர் அருளியதைக்கேட்ட அரசன் தன் மகளாகிய ஸாவித்திரியை நோக்கி 'முனிவராகிய நாரதர் ஸத்யவான் விஷயத்தில் கூறியது உண்மையாகுமாதலால், இனி நீ வேறு கணவனை வரிப்பாய்' என்று நயம்படக் கூறினன். இவ்வுரைகேட்ட ஸாவித்திரி, 'என் மனம புகுந்த அவனையல்லது பிறனொருவனை ஸ்வப்பனத்திலாவது நினைப்பேனோ?' எனச் சிறிதும கலங்காமற் கூறினள். அரசன் இவளுடைய அத்யவஸாயத்தின் பெருமை கண்டு வியந்து இவளிஷ்டப்படி காட்டிற்சென்று இவளை ஸத்யவானுக்கு விவாஹஞ்செய்துகொடுத்து அவளணிந்திருந்த ஆபரணங்களை வாங்கிக்கொண்டு காட்டில் வாழுவதற்குரிய காஷாயவஸ்திரங்களையும்,காய் கனி கிழங்கு தோண்டிக்கொண்டு வருவதற்கு மண் வெட்டி முதலியவைகள் அவள் விரும்பியபடி கொடுத்துவந்தனன்.

ஸாவித்திரியும் தன் பாதிவ்ருத்ய தர்மத்திற் சிறிதுங் குறைவின்றிக் காட்டில ஸத்யவானுக்குரிய பணிவிடைகள்செய்துவருகிற காலத்தில் ஸத்யவானுக்கு நாரதர் குறிப்பிட்டநாள் கிட்டியது. திடீரென்று ஸத்யவானுக்குத் தலைவலியுண்டாகத் திகைத்து நின்றான். அப்பொழுது ஸாவித்திரி அவனைத் தன் மடியிற் கிடத்திவைத்து வருத்தமுற்றிருந்தாள். அதுசமயம் யமனும் அவள் முன்தோன்றினன். இவள் அவனை நீ யார்? என்று வினவினள். அவன் 'நான் யமதருமன்; ஸத்யவானைக்கொண்டுபோக வந்தேன்' இவன் புண்ணிய புருஷனாதலால் இவன் உயிரைக் கவர்வதற்குத் தூதர்களையனுப்பாமல் நானே நேரில் வந்தேனென்று சொல்லி இவள் பார்த்திருக்க ஸத்ய வானுயிரைக் கவர்ந்து சென்றான். அப்பொழுது ஸாவித்திரி ஸத்யவான் சரீரத்தைப் பாதுகாவலுடைய ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு யமனுடன் பின்றொடர்ந்துசென்றாள். யமன் 'இவளை விட்டு விரைவில் செல்வது முறையில்லை' என்று இவளோடு கூடி

உரையாடிக்கொண்டு சென்றான். அப்பொழுது ஸாவித்திரி கூறிய தர்ம ஸூக்ஷ்மங்களையெல்லாங் கேட்டு வியப்புற்று நூறுமக்கட் பேறும், ஸத்யவான் உயிரும், மேலும் அவள் விரும்பிய வரங்களை யுங்கொடுத்துச் சென்றான்.

இந்த ஸாவித்திரியின் சரித்திரத்தை ஆராயும்போது தமயந்தி யைக்காட்டிலும் இவளுக்குச் சிறப்புண்டென்பது வெளியாகிறது. தமயந்தி பாதிவ்ருத்யத்தில் ஊற்றங்கொண்டு அதின் பலத்திலும் உயர்ந்தபலம் கைபுகுரவும் வெறுத்து, இந்திராதியர்களையும்வெறுத் தாளேயாகிலும் ஸாவித்திரிக்குண்டான சங்கடம் அவளுக்கில்லை. தமயந்திக்கு நாட்டிலுள்ளார்களைப்போல் சுகாநுபவத்திற்குக்குறை யில்லை. அரசன் மகளாய்ப்பிறந்தவளுக்குச் சக்கரவர்த்தியை மணம் புரிந்துகொள்ளும்படி நேர்ந்தது. அத்யவஸாயத்தின் நிறைமையில் இவளுக்கோர் குறைவுமில்லை. ஆனாலும் இவளுக்கோர்குறைவுண்டு. 'நளனைக்கண்டறியவேணுமென்று எண்ணங்கொண்டவள் மறுஸ்வ யமவரம் ஏற்படுத்தினாள்' என்று நாட்டார் கூறுவது குற்றமாகாது என்று வைத்துக்கொண்டாலும் இவளே அதுவிஷயத்தைச் சொல் லியனுப்பியது குற்றமேயாகும். தன் நாயகனை இவள் கண்டறிவ தற்காக மறு ஸ்வயம்வரமென்ற சூழ்ச்சியைச்செய்தனளாதலால் இது இவளுடைய ஊற்றத்திற்குக் குறைவாகமாட்டாது என்று சொல்லவொண்ணாது.

இதுவிஷயத்தைப் பின்னர் ஒரு சரித்திரத்தால் நன்கு விளக் கியபின் இது நிரூபிக்கப்பெறும்.

தொடரும்.

ஸ்ரீ:

பட்டினம்காப்பு. *

பட்டினங்காப்பு என்ற தொடர்மொழியானது பெரியாழ்வாரருளிச்செய்த "நெய்க்குடத்தைபபற்றியேறும்" என்ற திருமொழியில் மகுடமாகக்காணப்பட்டதொன்றும். பெரியாழ்வார் எம்பெருமானை நோக்கி "அப்போதைக்கிபபோதே சொல்லிவைத்தேன்" (அந்திமகாலத்து யமபடர் வந்து வருத்துகின்றபோது ஸ்தோத்திரம் பண்ணவொண்ணாது என்று சொல்லிவைத்தேன்) என்றார். அதன்மேல் "சழக்குநாக்கொடுபுன்கவிசொன்னேன்" என்று தம்முடைய அயோக்யதையை அநுசந்தித்து அகல, அவருடைய இந்திரியங்கள் பகவத்விஷயத்தில் மேல்விழுந்தமை கண்டு "பிழைப்பராயினும் தம்மடியார்சொல் பொறுப்பதுபெரியோர்கடனன்றே" என்று என் பிழைகளைப் பொறுத்தருளவேண்டும் என்று ப்ரார்த்தித்தார். அப்பொழுது எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி 'நாம் உம்மோடுகலந்து நிலலாது கடக்க நிற்கிலன்றோ நீர் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும்; நான் உம்முடைய தேகத்தையும் ஆத்மாவையும் எனக்கிருப்பிடமாகக்கொண்டேன் என்றான்.

அப்பொழுது ஆழ்வார் (1) § நெய்யிருக்கின்ற குடத்தைப் பற்றிக்கொண்டு வரிசையாக ஏறுகின்ற எறும்புகளைப்போல

---

* பட்டினம்-ராஜதானி. ராஜதானி அரசனும் நிதியுமுள்ளவிடம். எம்பெருமான் நிதிபோல் கருதியிருககிற ஆத்மாவுடன் கூடியிருக்கும் உடம்பைப் பட்டினம் என்றார். ராஜதானியில் நகரமும் நிதியும் காவலுடையனவாதல்போல இங்கு உடம்பும் உயிரும் காவலைப் பெற்றிருக்கின்றனவென்பது கருத்து.

(1) நெய்க்குடத்தைப்பற்றியேறுமெறும்புகள்போல்நிரந்துஎங்கும்
கைக்கொண்டுநிற்கின்றநோய்காள்! காலம்பெறவுய்யப்போமின்
மெய்க்கொண்டுவந்துபுகுந்துவேதப்பிரானார்கிடந்தார்
பைக்கொண்டபாம்பணையோடும்பண்டன்றுபட்டினங்காப்பே.

§ இங்கு, நெய்க்குடத்தைப்பற்றியேறும் எறும்பேபோல் என்று உவமையாகக் குறிப்பிடப்பெற்ற தொடர்மொழியில் நெய் யென்பதை ஆத்மாவுக்கும், குடம் என்பதை சரீரத்துக்கும் உவமையாகக்கொள்க. நெய்க்கு, சமாராதன யோக்யத்துவமும் போக்யத்துவமும் இருப்பதுபோல ஆத்மாவுக்கு பகவதாராதன யோக்யத்வமும் போக்யத்வமும் உண்டு.

உடம்பு ‡ எங்கும் பரவிக்கொண்டிருக்கிற * வியாதிகளே! விரைவாகத் தப்பிப்பிழைக்கும்படி § போய்விடுவீர்கள். வேதங்களில் கேட்கப்படுகிற தன்னை இன்று நான் ¶ கண்ணாலே கண்டநுபவிக்கும்படி உபகரித்தவன், படத்தையுடைய ஆதிசேஷனாகிய படுக்கையோடு சரீரத்தில் விருப்பங்கொண்டுவந்து பிரவேசித்து

---

‡ எங்கும்–தருமபூதஜ்ஞானமுள்ளவிடமெங்கும். இதனால் நோய்கள் சரீரத்திலும் ஆத்மாவிலும் பரிசிக்கின்றனவென்பது புலனாம். ஆத்மதர்மம் சரீரத்திலே பரவுமோவென்னில்; "எனக்குத் தலை வலிக்கிறது". "கால் நோவுகிறது" என்ற வழக்கிருக்கின்றமையால் சரீரத்தில் ஆத்மதர்மம் பரவியிருப்பதறியலாம்.

* திருஷ்டாந்தத்தில் எறும் எறும்புகள்போல நோய்களும் பலவாதலால் நோய்காள் என்று பன்மையாகக் கூறினர்.

§ நோய்கள், அவயவமில்லாத ஆத்மாவைத்தாக்கிநின்று அதனை மெலியச்செய்வதற்கு ஆற்றலுண்டோ? இல்லையே. அவ்வாறிருக்க விரைவில் ஓடிப்போங்களென்று உரைக்கலாமோவென்னில்; நோய்கள், அவயவமில்லாத ஆத்மாவைச்சாடிநின்று அதனை விகாரப்படுத்துவதற்குச சக்தியில்லாதிருந்தாலும் நோய்வேதனை ஆகம ஸ்வரூபத்தைப் பரிசிக்குமாதலால் உரைக்கலாமென்க. இதனாலன்றோ 'நெய்க்குடத்தைப்பற்றியேறுமெறும்புகள்போல்" என்று உவமை கூறினர். எறும்பினால் குடத்துக்கு வருவதோர் துக்கமில்லையே. இதுநிற்க; பாபபலமாகிய நோய்களை அநுபவித்துத் தீர வேண்டுமே. அப்படியிருக்க நோய்களைப்போங்கள் என்று சொல்லலாமோ வென்னில்; உபாஸகனுக்குத தேவர் கடன், ரிஷிகள் கடன், பிதுரர் கடன் என்ற மூன்று கடனுண்டு ப்ரபந்நனுக்கு அந்தக்கடன் ஒன்றுமில்லை. பகவத் ஸமாசிரயணவேளையில் இவன் செய்த பாபங்களெல்லாம் நசித்துப்போகும். ஆதலால் இவன் அதனை அநுபவிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஆதலால் நோய்கட்கு விடைதந்தனரென்க. ஆழ்வாருக்குள்ள பாபவினைகளெல்லாம் பகவத் ஸமாசிரயண காலத்திலே நசித்திருக்குமாகில் இப்பொழுது நோய்களை நோக்கிப் போங்கள் என்று சொல்வதற்குக் காரணமென்னையெனின்? பிணமெழுந்துகடிக்குமோவென்னும் அதிசங்கையாலும், பூர்வ வாஸனையாலும் பயப்பட்டுச சொல்லுகிறாரேயன்றி வேறில்லை.

¶ "நசக்ஷுஷாவபஶ்யதி" "நசக்ஷுஷாபச்யதி"என்றும், "கட்கிலீ" என்றும் சொல்லப்படுகிற பரப்பிர்ம்மத்தைக் கண்ணால் காணுமாறில்லை. இங்கு ஆழ்வார் கண்டாரென்பது மானஸ ஸாக்ஷாத்காரமென்று கொள்க.

* படுத்திருக்கிறன். என்னுடம்பு முன்புபோலன்று. இப்பொழுது காவலைப்பெற்றிருக்கிறது.

(2) முத்துக்கள் உண்டாகப்பெற்ற அலைகளோடு கூடிய பாற்கடலின் கண்வளர்ந்தருள்பவனும், பழமையான அறிவு விசேஷத்தையுடையவரான நித்யஸூரிகளுக்குத் தலைவனும், அடியார்கட்கு அமுதம்போல்பவனுமாகிய எம்பெருமானுக்குப் பக்தனாகிவிட்டேனாதலால் தெற்குத்திக்கிலிருக்கின்ற யமபுரத்துக்குத் தலைவனை யமன் சித்திரகுத்தன் தன் சக்தியால் வாயு அக்னி ஆகாசம் பூமி வருணன் சந்திரன் சூரியன் மனம் யமன் பகல் இரவு காலைமாலை தருமதேவதை என்ற பதினன்கு பேர் சாக்ஷியாக எழுதிய எழுத்தோடு கையெழுத்திட்டு வைத்த கணக்கை யமகிங்கரர்கள் அடையாளத்தோடு மாறுபடும்படி ‡ சுட்டெரித்துவிட்டு ஓடியொளித்துக்கொண்டார்கள்.

---

* கிடந்தார்—ஆழ்வாரை ஸர்வேசுவரன் ஆளிட்டுக் காக்காமல் தானே காக்கவேண்டுமென்ற கருத்தால் இவரது இருதயத்தில் வந்து கிடந்தான். இங்ஙனம் கிடக்கின்ற வைத்தமாநிதியாகிய அவனை ஆழ்வார் பாதுகாக்கின்றார். முன்பு ஸர்வேசுவரன் அந்தர்யாமியாய் நின்று இவரைப் பாதுகாக்கின்றகாலத்தில் நோய்கள் இவரைக் கிட்டும்படிசெய்தாலும். இவர் அவனைப் பாதுகாக்கின்றபோது பரிவுடையவராதலால் அவனுக்கிருப்பிடமாகிய ஆத்மாவிலும் தேகத்திலும் நோய்கள் வரவொட்டாமல் காக்கின்றார்.

(2) சித்திரகுத்தனெழுத்தால்தென்புலக்கோன்பொறிபொற்றி
வைத்தவிலச்சினைமாற்றித்தூதுவரோடியொளித்தார்
முத்துத்திரைக்கடற்சேர்ப்பன்மூதறிவாளர்முதல்வன்
பத்தர்க்கமுதனடியேன்பண்டன்றுபட்டினங்காப்பே.

ஆழ்வார் முன்பு 'எல்லையில்வாசல்'' என்பதில் ''நில்லுயிரினென்னுமுபாயமில்லை''யென்று யமதூதர்க்கு அஞ்சியவர் இங்கு அதற்கு விரோதமாக ''தூதுவர் ஓடியொளித்தார்'' என்றுரைப்பது கூடுமோவென்னில்; அவ்விடத்தில் இவருக்குப் பிறந்த உபாயாத்யவஸாயஜ்ஞானம் பூர்த்திபெறுமையால் யமகிங்கரர்கட்கு அச்சமுற்றுரைத்தார். இங்கு அந்த அத்யவஸாயஜ்ஞானம் பூர்த்தியடைய அதனால் நிஷ்களங்கமாக ''ஓடியொளித்தார்''என்று அருளிச்செய்தாராதலால் கூடுமென்க.

‡ தூதர்கள் ஓடியொளித்தாலும் சித்திரகுத்தன் எழுதி வைத்த கணக்கிருக்குமாகில் அது காரணமாக அச்சமுண்டாகும். ஆதலால் அதனையும் எரித்தார் என்றருளிச்செய்தார். ''உயிரும் தருமனையே நோக்கும்'' என்றபடி

(3) கோரப்பற்களில் பூமியை மீட்டுக்கொண்டுவந்த எனது தந்தையாகிய ஸ்வாமி § கர்ப்பவாசமாகிய சிறையை ஒழித்தும், வலிமையுள்ள பஞ்சேந்திரியங்களாகிய எருதுகளை அடக்கியும், நரம்பும் எலும்பும் ஆகிய இவற்றோடு சேர்ந்த ஸ்தூலசரீரத்தைப் போக்கியும் ‡ காலில் யமதூதர்கள் கட்டுகிற கயிறாகிய ஆயுதத்தைக் கிட்டவராமல் தடுத்தும் இரவும் பகலும் * நல்லறிவைக்கொடுத்து நன்னெறியில் நடக்கும்படி பழக்கி கைங்கர்யம் செய்யும்படி அங்கீகரித்தான்.

(4) * நரசிங்கரூபியாக அவதரித்த உபகாரகனும் எனது

லோகாதிபத்யம் வஹிக்கின்ற பிர்ம்மாதிகளொழிய மற்றெல்லா ஆத்மாக்களுக்கும் யமவசியதையுண்டென்பது நிச்சயம். ஸர்வேசுவரனால் அபிமானிக்கப்பெற்றவர்கட்கு மாத்திரம் அந்த யமவசியதையில்லையென்பது ஆழ்வார் இங்ஙனமருளியதனால் விளங்குகிறது. "நமன்றமர் என்றமரை வினவப் பெறுவாரல்லர்" என்பதனாலுமறியலாம்.

(3) வயிற்றிற்றொழுவைப்பிரித்துவன் புலச்சேவையதக்கி
கயிற்றுமக்காணி கழித்துக்காலிடைப்பாசங்கழற்றி
எயிற்றிடைமண்கொண்டவெந்தை யிராப்பகலோதுவித்தென்னைப்
பயிற்றிப்பணிசெய்யக்கொண்டான்பண்டன்றுபட்டினங்காப்பே.

§ இரண்டாம் பாட்டால் யமவசியதையில்லையென்றார். இப்பாட்டால் அதற்குக் காரணமான சரீரஸம்பந்தமில்லை யென்கிறார். கயிற்றுமக்காணி என்றதனால் ஸ்தூலசரீரமும், காலிடைப்பாசம் என்றதனால் ஸூக்ஷ்மசரீரமும் குறிப்பிடப்பட்டன.

‡ காலிடைப்பாசம் என்பதற்கு மற்றோர் பொருள் வருமாறு.— கால்—காற்று. (பிராணன்) பாசம்—ஆத்மாவை வரிந்துகொண்டிருக்கிற ஸூக்ஷ்மசரீரம். இந்தச் சரீரம் லோகாந்தரஞ் செல்கின்றகாலத்தில் பஞ்சவிருத்திப் பிராணனில் தங்கியிருக்கும்.

* நல்லறிவைக்கொடுத்து என்றது இந்திரிய வசப்பட்டிருத்தலும், கர்மவசப்பட்டிருத்தலும். யமன் வசப்பட்டிருத்தலும் என்றவிவை விடத்தக்கனவென்றறிவித்து என்றவாறு.

(4) மங்கியவல்வினைநோய்காள்உமக்குமோர்வல்வினைகண்டீர்
இங்குப்புகேன்மின்புகேன்மின்எளிதன்றுகண்டீர்புகேன்மின்
சிங்கப்பிரானவனெம்மான்சேருந்திருக்கோயில்கண்டீர்
பங்கப்படாதுய்யப்போமின்பண்டன்றுபட்டினங்காப்பே.

* வல்வினைகளே! நீங்கள் என்னிடத்திற்புகுவீர்களாகில் சிங்கப்பிரானிடத்தில் ஹிரண்யன் பட்டபாட்டைப் படுவீர்கள் என்ற கருத்தால் இங்கு நரசிம்மாவதாரத்தைக் குறிப்பிட்டார்.

தலைவனுமாகிய ஸ்வாமிவந்து சேருகிற கோயிலாகும் எனது சரீரம் ஆதலால் ஆத்ம ஸ்வரூபம் தெரியாதபடி மயங்குதற்குக் காரணமான § கொடிய பாபவினையாலுண்டாகின்ற வியாதிகளே! உங்களுக்கும் கொடிய பாபவினை வந்துற்றது. இனி ‡ இங்குப் புகாதிருமின்! புகாதிருமின்!! இங்கே புகுவது சுலபமான காரியமன்று. வந்து புகுந்து அவமானப் படவேண்டாம். பிழைக்கும்படி ஓடிப் போய்விடுங்கள்.

(5) * பிர்ம்மசாரி வேஷத்தையுடைய வாமனரூபியாகி மஹாபலியிடத்தில் யாசித்த ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையவனை விரும்பிக்கொண்டுவந்து வேறொன்றுகவில்லாமல் என் மனத்திற்புகும்படி வைத்துக்கொண்டேன். மிகுந்த பலமுள்ள திருடர்களாயிருக்கின்ற இந்திரியங்களே! இப்போது என்னுடைய சரீரம் மாணிக்க ரத்னம் வைத்திருக்கும் ஒரு பொருட்சாலையாகும். ஆதலால் நீங்கள் தாமதிக்கவேண்டாம் விரைவாகப் போவீர்கள்.

---

§ ஸர்வேசுவரனைல் போக்கிஞலன்றி ஜீவனுடைய பிரயத்தனததால் ஒழிக்கவொண்ணு வினையாதலால் கொடிய வினையென்ருர்.

‡ வல்வினைகளின் நெஞ்சிற்படுவதற்காக இங்குப் புகாதிருமின்! புகாதிருமின்!! என்று பன்முறை வற்புறுத்தி யருளிச்செய்தார்.

(5) மாணிக்குறளுருவாயமாயனையென்மனத்துள்ளே
பேணிக்கொணர்ந்துபுகுதவைத்துக்கொண்டேன்பிறிதின்றி
மாணிக்கப்பண்டாரங்கண்டீர்வலிவன்குறும்பர்களுள்ளீர்
பாணிக்கவேண்டாநடமின்பண்டன்றுபட்டினங்காப்பே.

* எம்பெருமான் தேவகார்யஞ்செய்வதற்கு வந்ததுபோல என்னுடைய கார்யஞ் செய்வதற்கு வந்துள்ளான். நோய்களே! நீங்கள் என்னைவிட்டகலாதிருப்பீர்களாகில் அக்காலத்தில் மூண்பட்ட நமுசியும் சுக்ரனும் பட்டபாட்டைப்படுவீர்கள். ஆதலால் என்னைக்கடந்து செல்வீர்களென்று அருளிச்செய்திருர். [நமுசி—மஹாபலியின்புதல்வன் இவன், வளார்ந்துசென்ற திரிவிக்ரமனுடைய திருவடியைப் பிடித்திழுத்து. அதனுல் மாணடொழிந்தான். சுக்ராசார்யர், மஹாபலி தானஞ் செய்கின்ற காலத்தில் கெண்டிசசெம்பினீர்த் தாரையில் வண்டுருபியாயிருந்து தடுத்து அதனுல் கண்ணிழந்தான்.]

(6) நெடுங்காலமாக என்னையடைந்திருக்கிற மிகுந்த துன்பத்தைச்செய்யும் நோய்களே! உங்கட்கு ஒன்று சொல்வேன் கேட்பீர்களாக. இந்தச் சரீரம் § பசுக்கள் மேய்க்கிற கண்ணபிரான் ‡ விரும்பியிருக்கிற திருக்கோயிலாகும். மேலும் முடிந்த விஷயத்தைச்சொல்கிறேன். என்னைக்கொடிய துன்பத்தில் ஆழச்செய்த பாபங்களே! இனி உங்களுக்கு இந்தத்தேகத்தில் சிறிதும் சம்பந்தமில்லை. இவ்விடத்தைக்கடந்து அப்பாற்செல்லுங்கள்.

(7) ஸ்தனமாகிய சிறியமலையென்று அதில் விருப்புற்றுச் சொல்லியும், * குழியில் தவறிவிழுந்தும், பின்பு ஒப்பற்ற நரகமாகிய குகையிலே புகுந்து அதிலேயழுந்தியிருந்தும் இவ்வாறு உழன்றுதிரிகிற என்னை மரக்கலங்களையுடைய சமுத்திரம் போன்ற நிறத்தையுடையவனான எம்பெருமான் என்னுடைய கொடிய பாபவினையானவற்றைப்போக்கி என்னை அவமானப்படாதபடி செய்துவிட்டான்.

---

(6) உற்றவுறுபிணிநோய்காள்உமக்கொன்றுசொல்லுகேன்கேண்மின்
பெற்றங்கள்மேய்க்கும்பிரானார்பேணுந்திருக்கோயில்கண்டீர்
அற்றமுரைக்கின்றேனின்னமாழ்வினைகாள்உமக்கிங்கோர்
பற்றில்லைகண்டீர்நடமின்பண்டன்றுபட்டினங்காப்பே.

§ பசுக்களுக்கு இந்திராதிகளால் வந்த ஆபத்தைப் போக்கியதுபோல நான் பட்ட கிலேசமெல்லாம் போக்கக் கண்ணபிரான் வந்தான். கொடிய பாபங்களே! நீங்கள் இந்திராதிகள் பட்டதுபடாமல் விரைவில் என்னை விட்டு அகன்று விடுங்கள் என்று அருளிச்செய்கிறார்.

‡ எம்பெருமான் உகந்தருளிய நிலங்களிற் செய்யும் விருப்பங்களை ஆழ்வார் தம் திருமேனியிற் செய்கின்றான் என்பார் விரும்பியிருக்கின்ற திருக்கோயிலாகுமென்றார்.

(7) கொங்கைச்சிறுவரையென்னும்பொதும்பினில்வீழ்ந்துவழுக்கி
அங்கோர்முழையினிற்புக்கிட்டழுந்திக்கிடந்துழல்வேனை
வங்கக்கடல்வண்ணனெம்மான்வல்வினையாயினமாற்றி
பங்கப்படாவண்ணஞ்செய்தான்பண்டன்றுபட்டினங்காப்பே.

* ஸ்தனங்களை வரையாக உருவகஞ்செய்து பின்னர், அதனைக் குழியென்றுரைப்பது பொருந்துமோவென்னின்; ஸ்தனங்கள் எவரையும் தம்பாலீடுபட்டு ஆழச்செய்கின்ற முறைபற்றிக் கூறினாராதலால் கூடுமென்க.

(8) பீதாம்பரத்தையுடைய உபகாரகனாகிய ஸர்வேசுவரன் § ஞானசார்யு வடிவினனாய்த்தோன்றி ஞானத்துக் கிருப்பிடமான வஸிய மனமாகிய தாமரையிலே புகுந்து குற்றமென்று சொல்லப் படுகிற ‡ அனைத்தையும் போம்படிசெய்து எனது தலையாகிய நிலத் திலே திருவடியாகிய அடையாளத்தை வைத்தான்.

(9) * அழகிய ஒளியினையுடைய ¶ சக்கரமே! சங்கமே! விரோ திகள் அற்றுப்போம்படி வீசப்படுகிற நாந்தக மென்னும் வாளே! அழகிய சார்ங்கமென்கிறவில்லே! கதாயுதமே! உறங்காதிருங்கள்.

---

(8) ஏதங்களாயினவெல்லாமிறங்கவிடுவித்தென்னுள்ளே
பீதகவாடைப்பிரானார்பிரமகுருவாகிவந்து
போதில்கமலவன்னெஞ்சம்புகுந்துமென்சென்னிதிடரில்
பாதவிலச்சினைவைத்தார்பண்டன்றுபட்டினங்காப்பே.

§ ஸர்வேசுவரன் ஞானசாயனாய் நின்று தமக்குள்ள அஜ்ஞானங்களை யகற்றினனென்றருளிச்செய்கிறார். [ஞானசார்யன்–பிர்ம்மத்தையுபதேசிக் கிறவன்.]

‡ தேகத்தை ஆத்மாவாக நினைப்பதும், தன்னையே கர்த்தாவாகக் கருதுவதும், தன்னைப் பிறருக்கடிமையென்று எண்ணுவதும் முதலியவெல் லாம் குற்றமாதலால் அனைத்தையுமென்றார்.

(9) உறகலுறகலுறகலொண்சுடராழியேசங்கே
அறவெறிநாந்தகவாளேஅழகியசார்ங்கமேதண்டே
இறவுபடாமலிருந்தவெண்மருலோகபாலீர்காள்
பறவையரையாஉறகல்பள்ளியறைகுறிக்கொண்மின்.

* மேல் எட்டுப்பாட்டினால் ஆழ்வார் எம்பெருமான் தமக்குக் காவலா யிருந்தபடி அருளிச்செய்தார். இந்தப் பாட்டால் அவன்றனக்குத் தாம் காவலாயிருப்பதை யருளிச்செய்கிறார்.

¶ ஒருவகையாலும் உறங்காதிருக்கின்ற ஆயுதாழ்வார்களாகிய நித்ய ஸூரிகளை ஆழ்வார் தம் பரிவின் மிகுதியால் உறங்காதிருப்பீர்களென்று அருளிச்செய்தார். நித்யஸூரிகள் எம்பெருமானுடைய குணங்களிலீடுபட்டுப் பரவசமாயிருப்பதுமுண்டு. அதனை நோக்கி 'உறங்காதிருப்பீர்கள்' என்று அருளிச்செய்தாரெனினும் பொருந்தும்.

உறங்காதிருங்கள். காவல் தொழில் தப்பாமலிருக்கிற ‡ அஷ்ட திக்குப் பாலர்களே! உறங்காதிருங்கள். * பக்ஷிகட்கு அரசனாகிய கருடனே! உறங்காதிரு. எம்பெருமான் பள்ளிகொண்டிருக்கிற அறையாகிய சரீரத்தை கருத்துடன் பார்த்துக்கொள்ளுங்கள்.

(10) § ஆதிசேஷனாகிய படுக்கையோடும், அழகினையுடைய திருப்பாற்கடலோடும், தாமரை மலரிலிருக்கின்ற பெரியபிராட்டியும் எம்பெருமானாகிய தானுமாக எனது உடம்பாகியவிடத்தில் வந்து புகுந்து பாற்கடலில அலைகள்வீச அறிதுயிலமர்கின்ற உபகாரகனைப் பெரியாழ்வார் எம்பெருமானுடைய திருக்கோயிலாகிய தமது சரீரபபாதுகாவலுக்காகத துதிக்கின்றார்.

---

‡ நித்யவிபூதியிலுள்ள ஆயுதாழ்வார்களை நோக்கி அருளியதுமாத்திரத்திலமையாமல், லீலாவிபூதியிலுள்ளவர்களாகிய அஷ்டதிக்பாலர்களையும் நோககி ஜாக்ரதையாகப்பாதுகாத்துக்கொள்ளுங்களென்று அருளிச்செய்தார்.

* இறுதியில் பெரியதிருவடியை அருளிச்செய்தற்குக்காரணம் யாதென்றால்; நித்யவிபூதியிலுள்ள ஆயுதாழ்வாாகளும், லீலாவிபூதியிலுள்ள அஷ்டதிக்பாலர்களும் ஒரிடத்தினின்று பாதுகாக்குமியல்பினர்கள். பெரியதிருவடி எங்கும் சஞ்சரித்து நின்று பகைவர்களை யழிக்குமியல்பினராதலால் இறுதியில் அருளிச்செய்தார்.

(10) அரவத்தமளியினோடுமழகியபாற்கடலோடும்
அரவிந்தப்பாவையுந்தானுமகம்படிவந்துபுகுந்து
பரவைத்திரைபலமோதப்பள்ளிகொள்கின்றபிரானை
பரவுகின்றான்விட்டுசித்தன்பட்டினங்காவற்பொருட்டே.

§ எம்பெருமான் தன்னுடைய பரிவாரங்களோடும், தனக்கு வாஸஸ்தானமான திருப்பாற்கடலோடும் ஆழ்வாருடைய திருவுள்ளத்திற் புகுந்து இனிதாகக் கண்வளர்ந்தருள்கிறானாதலால் அந்த எமபெருமானுடைய கோவிலுக்கு யாதொரு கெடுதியும் நேராதிருக்கும்படி அவனையே துதிக்கிறார். இப்பாசுரம், "அடியோமோடும்" என்ற பாசுரத்தோடு கருத்தொற்றுமையுடையது. ஆழ்வாா தம் பரிவினால் "பல்லாண்டு" என்று தொடங்கி எம்பெருமானுக்கு மங்களாசாசனஞ்செய்து, இங்கும் "உறகல் உறகல்...காவல் பரவுகின்றான்" என்று மஙகளாசாசனமாகவே முடிக்கின்றாராதலால் பெரியாழ்வார் அருளிய திருமொழி முழுமையும் மஙகளாசாசனத்தையே முக்யப் பொருளாகக்கொண்டதென்று அருளிசசெய்வர்கள்.

ஸ்ரீ:

அரக்கர் அசுரர்.

அரக்கர்—இராக்ஷஸர்; இராக்காலத்தில் சஞ்சரித்துத்திரியவர்; எவ்வுயிர்களையும் வருத்தித்திரியும் கொடிய தொழிலுடையவர். அசுரர் காசிபருக்குததிதியினிடததிற் பிறந்தவர்கள. தேவர்கட்கு முன்பே தோன்றினர்களாதலால் இவர்களைப் பூர்வதேவர்களென்றுஞ்சொல்வதுண்டு. இவர்களுடைய உத்பத்தியைக்குறித்துப் புராணங்களில் பிர்ம்மாவின் தமோமயமான சரீரத்திலிருந்து (ஜகனபிரதேசத்திலிருந்து) பிறந்தவர்களென்று சொல்லப்பட்டுளது. இவர்கள் தேவர்கட்கு இயற்கைப் பகைவர்.

மேலும், அசுரர்—சுரரல்லாதவர்கள். சுரர், அமரர், தேவர், நிர்ஜரர் என்ற சொற்களெல்லாம் ஒரு பொருளுடையன. இந்த, சுரர் முதலிய சொற்களின் அவயவப்பொருளை யாராய்ந்தால் முறையே ஐசுவர்யத்தையுடையவர்கள் மரணமில்லாதவர்கள் விளங்குகின்றவர்கள் கிழத்தனமில்லாதவர்கள்என்ற பொருள்கிடைக்கும். இந்தச் சொற்களாற் குறிப்பிடப்படுவோர் நித்யவிபூதியாகிய பரமபதத்தில் வாழ்கின்ற நித்யஸூரிகளே. இச்சொற்கள் நித்யஸூரிகளைக் குறிப்பிடுமானல் இந்திரலோகததில் வாழ்ந்து வருகின்றவர்கட்கு இச்சொற்கள் பெயராக வழங்கப்பட்டு வருகின்றனவென்பது பொருந்துமோவெனின்; பகவச்சபதம் ஸர்வேசுவரனுக்கே உரியதாயிருக்க, உபசாரத்தால் நாரதபகவான், வாலமீகிபகவான் என்று இவர்கட்கும் வழங்கபபட்டு வருவதுபோல, சுரர் முதலிய சொற்களும் உபசாரத்தால ஸ்வர்க்கலோகத்தில் வாழ்கின்றவர்களையும் உணர்த்தும். இந்த, சுரர்கட்கு விரோதிகளைத்தான் இங்கு அசுரர் என்று குறிப்பிடபபடடது.

இதுவரையுங் கூறியதினல், அரக்கர் அசுரர் என்ற சொற்கள் நுவ்வொரு குலத்தினரைக் குறிப்பிடுமென்பது பெறப்பட்டது. இனி, இச்சொற்கள் வேறுவகையாகவும் பொருளுணர்த்துமென்பது ஆராயப்படும்.

இச்சொற்கள், அரக்கத்தன்மையுடையார், அசுரத்தன்மை யுடையார் என்ற பொருளையும் உணர்த்தும்ஆற்றலுடையன. எவர்கள் தீயவொழுக்க முடையவர்களோ அவர்கள் அரக்கர். எவர்கள் ஸாதுக்களுக்கு விரோதிகளோ அவர்கள் அசுரர். இப்பொருள்கள், அரக்கஜாதியரையும், அசுரஜாதியரையும் விலக்கி நின்றன.

இதுபற்றியே, கண்ணன் கீதையில் பதினாறும் அத்யாயத்தில், இந்தக்கருமபூமியில் பிராணிகளின் சிருஷ்டியானது தெய்வசிருஷ்டி என்றும், அசுரசிருஷ்டியென்றும் இரண்டுவிதமாயிருக்கும்; என்று அருளிச்செய்தான். இவற்றுள், துக்கத்திற்குக்காரணமான பயங் கொள்ளாதிருக்கை, மனம் ரஜஸ் தமஸுகளோடு கலவாதிருக்கை, தேகத்தைக்காட்டிலும் ஆத்மா வேறு என்று பகுத்தறிவதில் நிஷ்டை, நல்வழியில் சம்பாதித்தபொருளை நற்குணமுடையவர்கட்குக் கொடுக்கை, மனம் விஷயங்களினின்றுந் திரும்பும்படி பழகுகை, பிரயோஜனத்தை விரும்பாமல பகவதாராதனரூபமான யக்ஞத்தை யநுஷ்டிக்கை, வேதமெல்லாம் எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குணங்களைப் பேசுமியல்பினையுடையனவென்று கருதி அவற்றைப் பயிலுகை, ஏகாதசி உபவாச முதலியவற்றை அநுஷ்டிக்கை, மனம் வாக்கு காயம என்ற இம்மூன்றும் ஒருபடிப்பட்டிருக்கை, பிறருக்குத்துன்பம விளைககாமை, எலலோருக்கும நலமாகபபேசுகை, ஆத்மாவுக்கு நன்மையில்லாதவைகளைக் கைவிடுதல, ஓருயிரும் துக்கப் படசகியாமை, பிறருக்குத்தீங்கைவிளைக்கும் வார்த்தைகளைச்சொல் லாமை, விஷயங்களில் ஆசையற்றிருக்கை, சாதுக்கள் வந்துசேரும் படி சாந்தனாயிருக்கை, செய்பததகாத காரியத்தைச் செய்வதில் அருவருக்கை, பிறாகளால துன்பம் நேர்ந்தாலும் அவர்களிடத்தில் வெறுபபுறுதிருக்கை, புறங்கூறுதிருக்கை, மிகுந்தஆபத்திலும செய்யத்தக்க கடமைகளைச்செய்வதில உறுதிகொண்டிருக்கை, கொவங் கொள்ளாமை ஆகிய குணங்களுடையவன் எவனோ அவனே தேவ ஜன்மத்தையுடையவன்.

பெண்டுபிள்ளைகள் முதலிய எல்லாம் என் திறமையால் சம்பாதித்தேன்; இப்படியே நான் விரும்பியவற்றை நானே சம்பாதிக்கப் போகிறேன்; என்னுடைய ஆற்றலால் ஈட்டப்பட்டதிரவியம் இதோ

இருக்கின்றது; இன்னுமிப்படியே சாமர்த்யத்தால் சம்பாதிக்கப் போகிறேன்; இந்தச் சத்ருவை மஹாபலசாலியான யானே கொன்றேன்; இன்னும் இவ்வாறே அநேக பெயரைக் கொல்லப்போகிறேன்; ஒவ்வொன்றும் அவரவர் செய்த ஊழ்வினைக்குத்தக்கவாறு நடக்குமென்பது வீண்பிதற்றுதலே. நான் ஒருவனுக்கும் ஆட்பட்டவனில்லை; நானே ஈசுவரன்; இன்னும் பலபெயர்களையு மாளப் போகிறேன்; பலபோகங்களையும் அநுபவிப்பேன்; யான் ஒருவனால் சிருஷ்டிக்கப்பட்டவனல்லேன்; நானே ஸ்வயம ஸுகியாயும் பலவானுயுமிருப்பேன்; நான் ஸ்வயம் பரிபூரணன்; உத்தமமான வம்சத்திற்பிறந்தவன்; இவ்வுலகத்தில் எனக்குச் சமமானவன் ஒருவனுமில்லை; நான் தானுகவே யாகஞ்செய்வேன்; தானமுஞ் செய்வேன் என்ற கெர்வம் தூரபிமானம் காமக்குரோதம் கோபம் அறிவின்மை முதலிய கெட்ட குணங்களுள்ளவன் எவனே அவனே ஆசுர ஜன்மத்தையுடையவனுவான்.

இந்த அசுரப் பிறவியாய்ப்பிறந்தவர்கட்கு இது விடத்தக்கது; இதுகொள்ளத்தக்கதென்ற விவேகம் சிறிதும் இருக்கமாட்டாது. இவர்கள் சாஸ்திரவிதிகட்கு இணங்கமாட்டார்கள; நலலொழுக்க மற்றவர்கள்; ஸத்யமான பிரம்மத்தினின்றும் தோன்றினதாய் பிர்ம்மஸ்வரூபமாயிருக்கிறஇந்த உலகத்தைஅஸத்தியம்என்பார்கள்; ஸர்வசக்தியுடன் நம்மால் ஆளப்படுகிற இப்பிரபஞ்சத்திற்கு ஈசுவரனே யில்லையென்பார்கள்; பசு பக்ஷி மனிதன் முதலிய எல்லாம் ஸ்திரீ புருஷ ஸம்பந்தத்தாலுண்டாகின்றன; இன்னும் ஆராய்ந்து பார்த்தால எல்லாம் காமத்தாலே உண்டாகின்றனவென்று தீர்மானிக்கவேண்டுமென்பர்கள்; தேகபோஷணத்தைக்காட்டிலும் பிறிதொரு புருஷார்த்தமிலலை யென்பாகள்; இந்தக் காமபோகத்திற்காக அக்கிரமமான ப்ரவிருத்தியையுஞ் செய்வார்கள.

இவ்வாறிருக்கின்ற இவர்கள் என்னுடைய நிக்ரஹத்திற்கு விஷயமாகி நரகத்திற் கிடந்துழல்வார்கள்; என்று அருளிசசெய்தான். இதனுல் தேவாசுர விபாகம் ஜன்மத்தாலன்றி ஸ்வாபத்தாலுமுண்டென்பது பெறபபட்டது. பிரகலாதாழ்வானும், விபீஷணுழ்வானும் அசுர ராக்ஷஸகுலத்தில் அவதரித்தவராயிருந்தாலும்,

பக்திஸத்வகுண முதலிய நன்மைகளையுடையவராயிருந்தனராதலால் தேவாம்சமுடையவராய் விளங்கினர்கள். ஸ்வபாவத்தால் தேவாம்சமுண்டென்பதற்கு இவர்களே உதாரணமாவார்கள்.

மேலும் * ப்ரசன்ன அரக்கரென்றும் ப்ரசன்ன அசுரரென்றும் மற்றொரு வகையினரும் உண்டு. இவருள் ப்ரசன்ன அரக்கராவார் வெளித்தோற்றத்தில் சாதுக்கள்போல் வேஷதாரியாயிருந்து பரதார பரதிரவ்யங்களை அபகரிப்பவராய், தேக போஷணத்தினிமித்தம் பிறவுயிர்களை வருத்தி உண்பவராய், பொய் களவு சூது முதலிய வஞ்சனைகளையுடையவர்களாய், இரக்கம்சிறிதுமற்றவராய் இருப்பவராவார். ப்ரசன்ன அசுரராவார் அநுகூலர்போலிருந்து அநுகூலர்க்கு என்றும் இயற்கைப் பகைவராவார். முற்கூறியவாறு அரக்கரசுர ஜாதியாரைக்காட்டிலும் அரக்கரசுர ரியல்பினரிலும் இவர்கள் மிகவும் கொடியாராவார்.

பகைவர்களாய்த் தோற்றினல் அவர்களைச் சூழ்ச்சியால் வெல்லலாம். அநுகூலப்பகையை வெல்லுவதரிதாமன்றோ! இதுபற்றியே கண்ணபிரானைக் கொல்வதற்குத்தாய்போல்வேஷந்தரித்து வந்த பூதனையைக் கொடியபகையென்று சொல்வதுண்டு. நெற்பயிருக்குக்களையென்றும் சங்கையென்றும் இரண்டு வகையான களைகளுண்டு. களை, பயிரைக்காட்டிலும் வேற்று வடிவுடையது. சங்கை, பயிர்போன்ற வடிவுடையது. வேற்றுவடிவுடைய களையைப்போக்கிவிடலாம். சங்கை யென்ற களை பயிர்போலிருப்பதால் அதனைக் களைவதரிதாம். அது பயிருடன் சேர்ந்திருந்து பயிரை நாசஞ் செய்யும். அதுபோல் இந்த ப்ரசன்ன அரக்கரசுரர்கள் அநுகூலர் கோஷ்டியிற்கூடியிருந்து அநுகூலர்க்குப பெரிதும் இடுக்கண்விளைப்பாராயினும் பெரியோரின் சாபத்திற்கிலக்காகி மீளாநரகிற்கு ஆளாவர்.

மயர்வறமதிநலமருளப்பெற்றவராகிய ஆழ்வார் "ஒன்றுந் தேவு"மென்ற திருவாய்மொழியில ஸ்ரீமந்நாராயணனே பரதேவதையாவானென்று நிஷ்பக்ஷபாதமாகவும் ப்ரமாணபூர்வகமாகவும்

---

* ப்ரசன்னம்—மறைவு.

ஸ்தாபித்து உபதேசித்தார். இதனால் பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளும் இங்கு வருதற்கு யோக்யதையுண்டு என்று சொல்வதற்கு ஹேதுவாக இங்குள்ள ஸம்ஸாரிகள் எல்லாம் திருந்தி எங்கும் ஸ்ரீவைஷ்ணவமயமாயிருக்கக்கண்டு ஆழ்வார் மகிழ்ச்சியுற்று அவர்களை "பொலிகபொலிக" என்ற திருவாய்மொழியில் மங்களாசாஸனஞ்செய்தனர். அப்பொழுது ஆழ்வாரது ஞானக்கண்ணுக்கு இந்த ப்ரசன்ன அரக்கரசுரரும் சாதுக்கள் கோஷ்டியில் கலந்து நின்றனர் புலனாக,

"செய்கின்றதென்கண்ணுக்கொன்றேயொக்கின்றதிவ்வுலகத்து
வைகுந்தன்பூதங்களேயாய்மாயத்தினுலெங்குமன்னி
யையமொன்றில்லையரக்கரசுரர்பிறந்தீருள்ளீரேல்
உய்யும்வகையில்லைதொண்டீரூழ்பெயர்த்திடுங்கொன்றே"

என்றருளிச்செய்தார். இங்கு அரக்கரசுரரென்றது ப்ரசன்னரக்காசுரரை. இதனை, + ஈட்டிலும் நன்றாக விளக்கியுள்ளார்.

+ இப்பாட்டிற்கு ஈட்டிற்கண்ட பொருள் வருமாறு:—

"ஸ்ரீவைஷ்ணவர்கள் அசுரராக்ஷஸரான உங்களையும் முடித்து யுகத்தையும் பேர்ப்பர்களென்கிறார்.

(செய்கின்றதித்யாதி) செய்கிறபடி பார்த்தேனுக்கு, என் கண்ணுக்கொன்றுபோலே யிராநின்றது.

என்போலேயிராநின்றதென்றால்; பகவத் குணங்களுக்கு மேட்டுமடையான சம்சாரத்திலே, நித்யவிபூதியிலிருப்புக்குத் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேயாய். (மாயத்தினுலெங்குமன்னி) "மாயாவயுநம் ஜ்ஞாநம்" "மாயாவயுநம் ஜ்ஞாநம்" என்கிறபடியே இச்சாபர்யாயமான ஜ்ஞாநத்தாலே. இசைசயாலே எஙகும் புகுந்திருந்து.

(ஐயமொன்றில்லை) "இங்கேயிருந்தே அவ்விருப்புக்குத்தோற்றிருப்பர்கள்" என்றதிலொரு ஸம்சயமில்லை. "பெயர்த்திடும்" என்னும் அதிலொரு ஸம்சயமில்லை யென்றுமாம்.

இதனுல் ப்ரசன்ன அரக்கரசுரர்கள் மிகவும் கொடியரென்பதும் அவர்கள் பெரியோர்கள் சாபத்திற்கிலக்காகி மாய்ந்துவிடுவரென்பதும் பெறப்பட்டன. அக்காலத்தில் இவ்வரக்கரசுரர் அருகியிருந்தனர். இக்காலத்தில் இவர்கள் மலிவுற்றிருக்கின்றனர். இப்பொழுது இவர்களால் பல தேவாலயங்கட்கும் பல சிறந்த ஸ்தானங்கட்கும் பெரிதும் இடுக்கண்விளைவதை ஆன்றோர் பலரும் நன்கறிவர்கள். இத்தகைய பெருங்குறையை நீக்கி அநுக்ரஹிக்குமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கவேண்டியதும் நமது கடமையாகும்.

ப. அ.

(அரக்கரித்யாதி) ராக்ஷசராயும் ஆஸுரப்ரக்ருதிகளாயுமிருப்பார் மநுஷ்யசரீரத்தையேறிட்டுக்கொண்டு' ஸ்ரீவாநரஸேனையின் நடுவே சுகாஸாரணர்கள் புகுந்தாப்போலே புகுர்ப்பார்த்தாருணடாகிலுங்களுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லை. ''வாழாட்பட்டு நின்றிருள்ளீரேல்'' என்று தேடவேண்டாதே, எல்லாரும் வாழாட்பட்டு, அரக்கரசுரர் பிறந்திருள்ளீரேலென்று தேடவேண்டும், படியாயிற்று; ஒன்றுங்தேவுங்கேட்டு சம்ஸாரம் திருந்தினபடி.

(தொண்டர்) ''ஸேவாஶ்வவ்ருத்தி:'' ''ஸேவாச்வவ்ருத்தி:'' என்கிற இதரவிஷயங்களிலே தொணடுபட்டிருக்கிற உங்களை கல்பந்தானே ஒழிம்வித்துக்கொண்டு தானும் பேருமென்னுதல்; அன்றிக்கே வைகுந்தன் பூதங்கள் உங்களையும் கொன்றாழியையும் பேர்ப்பரென்றுமாம்.''

இங்கு, அரக்கரசுரர் என்பதற்கு ஸ்ரீவாநரஸேனையின்நடுவே சுகஸாரணர்கள் புகுந்தாப்போலே புகுரப்பார்த்தாருணடாகில் என்றுரைக்கப்பட்டதால் இவ்வரக்கரசுரர்கள் ஸாதுக்கள்போன்ற வேஷதாரிகளாகிய ப்ரசன்ன அரக்கரசுரரென்பது புலனுகும். சுகன் ஸாரணன் என்பவர் இராவணனுடைய ஒற்றர்களாகிய அரக்கர்கள். இவர்கள் இராவணனுடைய ஏவலால் வானர சேனைகளின்நிலைமையை ஆராய்வதற்காக வானரர்போல் வடிவங்கொண்டு வானரரோடு கலந்தார்கள்.

ஸ்ரீ:

பாகவதாபசாரம்.

(176-ம் பக்கத்தொடர்ச்சி.)

(26) "ஶ்வபசோபி மஹீபால" "ச்வபசோபிமஹீபால"

---

(26) "ஶ்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக:, விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிஶ்ச ஶ்வபசாதம:" "ச்வபசோபிமஹீபால விஷ்ணு பக்தோ த்விஜாதிக:, விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம:" என்று எத்தனையேனும் நிக்ருஷ்ட ஜந்மாவாயிருந்தானே யாகிலும், பகவத் பக்தனானவன் த்விஜனில் காட்டிலதிகன். உத்க்ருஷ்ட ஜந்மாவானவளவன்றிக்கே உத்தமாச்ரமியாயிருந்தானேயாகிலும் பகவத் பக்தி ஹீனனானவன் ச்வபசனிற்காட்டில் அதமன் என்று, வர்ணாச்ரமங்களில் பசக்கறுத்து பகவத்ஸம்பந்தமே உத்கர்ஷ ஹேதுவாகச் சொல்லுகையாலே, ப்ரம்சஸம்பாவநாதிகளாலே தத்ஸம்பந்த விரோதியான ஜன்மத்திற்காட்டில் ததநுரூபமான ஜன்மமே சிரேஷ்டமென்று கருத்து. இங்ஙனன்றாகில் கீழ்ச்சொன்னவர்த்தத்துக்கு இது பிரமாணமாக மாட்டாதிறே" (இது, மணவாளமாமுனிகள் அருளிய வ்யாக்யானம்.)

முன் "அதுதானே இழவுக்குறுப்பாகில" என்னும் வாக்யத்தால் ப்ராஹ்மணயம் பாகவதாபசார மூலமாய் பகவத் பிராப்திக்குப் பிரதிபந்தகம் என்பதையும் "உதக்ருஷ்டமாக ப்ரமித்தஜந்மம்" என்னும் வாக்யத்தால், அது (ப்ராஹ்மண்யம்) உபாயாந்தராநுஷ்டமூலமாய், பகவத் ப்ராப்திக்குப் பிரதிபந்தகமென்பதையும், "அதுக்கு ஸ்வரூபப்ராப்தமான நைச்சியம் பாவிக்க வேணும்" என்னும் வாக்யததால் அது (ப்ராஹ்மண்யம்) பகவத் ப்ராப்திக்கு நேரேஸாதனமான பகவத்ஸம்பந்தத்திற்குப் பிரதிபந்தகமென்பதையும் அருளிச்செய்து "அபக்ருஷ்டமாகப்ரமித்த உத்க்ருஷ்டஜன்மம்" "நைச்சியம் ஜன்மஸித்தம்" என்னும் இரண்டு வாகயஙகளாலும் முற்கூறிய தோஷங்கள் மூன்றும் தாழ்ந்த ஜன்மாதிகளில் இல்லை யென்பதையும் நிரூபித்தார்.

இனி, சாஸ்திரங்களெல்லாம் ஒருபிரகாரமாயும், இப்பொழுது தேவரீர் ஸாதிக்கின்ற அர்த்தமொரு பிரகாரமாயுமிருப்பதால் இவ்வர்த்தங்கட்கு ப்ரமாணம் யாதென்னும் சங்கையுண்டாக, அசசஙகையைப் பரிகரிக்கவேண்டி ப்ரமாணங்களையும், சிஷ்டாசாரத்தையுமகொண்டு இவ்வர்த்ததை விஸ்தாரமாக உபந்யஸிக்கத்திருவுள்ளம்பற்றி "சவபசோபி" என்று தொடங்குகிறார்.—

வியாக்யானத்தில் "எத்தனையேனும்" என்பது முதல் "பகவத்ஸம்பந்தமே உத்கர்ஷஹேதுவாய்ச் சொல்லுகையாலே" என்பதுவரை சுலோகத்தின் பதார்த்தங்களையும், அதன் கருத்தையும் அருளிச்செய்து இந்த ப்ரகரணத்தோடு சுலோகத்தின் கருத்தை அமைத்துக்கொள்வதற்காக "ப்ரம்சஸம்பாவனா" இத்யாதிவாக்யங்களைத் தொடங்குகிறார். ச்வபசோபி என்பது எத்தனையேனும் தாழ்ந்தஜன்மாவாயிருந்தானேயாகிலும் என்றவாறு. விஷ்ணுபக்த: என்றது விஷ்ணுபக்தியுள்ளவனென்றவாறு. த்விஜாதிக: என்றது உயர்ந்தவர்ணத்திற்பிறந்தவனாகிய பிராம்மணனைக்காட்டிலும் உயர்ந்தவன் என்றவாறு. விஷ்ணுபக்தி விஹீநஸ்து என்றது விஷ்ணுபக்தியில்லாதவன் என்றவாறு. யதிச்ச என்றது உயர்ந்த ஜாதியுடைமையோடு உயர்ந்த ஆச்சிரமத்தையுமுடைய ஸந்யாஸியானாலும் என்றவாறு. ச்வபசாதம: என்றது * ச்வபசனைக்காட்டிலும் மிகவும் தாழ்ந்தவன் என்றவாறு. இதனால் பகவத்ஸம்பந்தமே உயர்விற்குக்காரணமென்றும், அஃதொழிந்த ஏனைய வர்ணாச்ரமங்கள் பிரயோஜனமில்லையென்றும் ஏற்படுகின்றன.

ப்ரம்சஸம்பாவனாதிகளாலே என்றது உபாயாந்தராநுஷ்டானமூலமாய் அந்யோபாயத்தினின்றும் நழுவுதல் வருகைக்கு யோக்யமாயிருக்கையாலே என்றவாறு. ஆதிசப்தத்தால் அஹங்காரம் ஸ்வரூபப்ராப்தமான நைச்சியம் பாவிக்கவேண்டுகை முதலிய தோஷங்களையுங்கொள்க. தத்ஸம்பந்த விரோதியான ஜன்மத்தைக்காட்டில் என்றது முற்கூறிய காரணங்களால் பகவத்ஸம்பந்தத்திற்கு விரோதியான பிராஹ்மண்யத்தைக்காட்டிலும் என்றவாறு. தத்ரூபமான ஜன்மமே சிரேஷ்டமென்றது முற்கூறியதோஷங்களின் அபாவத்தால் அந்த பகவத் ஸம்பந்தத்திற்கு அநுகூலமாயிருக்கின்ற தாழ்ந்த ஜன்மமே மிகவும் உயர்ந்தது என்றவாறு. கருத்து என்றது இவ்வர்த்தமே இந்தச் சுலோகத்தை இவ்விடத்தில் ப்ரமாணமாகக்கொண்ட நூலாசிரியரின் தாத்பர்யமென்றவாறு. இங்ஙனன்றாகில் என்றது முற்கூறியவாற்றால் பகவத் ஸம்பந்தமே உயர்விற்குக்காரணமென்றும், அதற்குப் பிரதிபந்தகமான பிராஹ்மண்யத்தைக்காட்டிலும் அச்சம்பந்தத்திற்கு அநுகூலமான தாழ்ந்தஜன்மமே உயர்ந்தது என்றும் நூலாசிரியருக்குத் தாத்பர்யமென்று வைத்துக்கொள்ளாதபக்ஷத்தில் என்றவாறு.

கீழ்ச்சொன்ன அர்த்தத்துக்கு என்றது முன்பு "பகவத்ஸம்பந்தமுண்டானால் இரண்டு மொக்குமோ" என்னும் வாக்யமுதல் இதுவரை இவர் நிரூபித்துக்கொண்டுவருகிற அர்த்தத்திற்கு என்றவாறு. அஃதாவது உயர்ந்ததும் தாழ்ந்ததுமான இரண்டு ஜன்மங்கட்கும் பகவத்ஸம்பந்தமுண்டானால் அச்சம்பந்தத்திற்குப் பிரதிபந்தகமான உயர்ந்த ஜன்மத்தைக்

* ச்வபசன்—நாய் மாம்சத்தைச் சமைக்கின்றவன்,

காட்டிலும் அதற்கு அநுகூலமான தாழ்ந்த ஜன்மமே உயர்ந்தது என்று நிரூபித்துக்கொண்டுவருகிற இந்த அர்த்தத்திற்கு என்பதாம். இது பிரமாணமாக மாட்டாது என்றது எவ்வளவு இழிந்தவனுகிலும் பகவத்பக்தியுடையவன் சிறந்தவன் எவ்வளவு உயர்ந்தவனுகிலும் அந்தபக்தியில்லாதவன் தாழ்ந்தவன் என்னும் பொதுமையான அர்த்தத்தைக்காட்டுகின்ற இச்சுலோகம் பிரமாணமாகமாட்டாது என்றவாறு.

இதுவரை உரையாசிரியரின் கருத்தை விளக்கலாயிற்று. இனி, சுலோகத்தின் பதாநுபூர்வியைநோக்கியும், ப்ரகரணத்தைக்குறித்தும் இச்சுலோகத்திற்குக் கீழ்வருமாறு பொருள்கூறினும் பொருந்தும். அஃதாவது * விஷ்ணுபக்தியுடைய சவபசன்விஷ்ணுபக்தியுடையபிராம்மணனைக்காட்டிலும் உயர்ந்தவன் என்று பொருள் கூறின் நேரே பிரகரணத்தோடு பொருந்தி விடும். சுலோகத்தில் இன்ன பிராம்மணனென்று விசேஷிக்காமல் பொதுவாயிருப்பதால் விஷ்ணுபக்தியுடைய பிராம்மணன் என்று பொருள் கூறுவது எங்ஙனம் பொருந்துமெனின்; பின் வாக்யத்தால் "விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசா தம:" என்று விஷ்ணுபக்தியில்லாதவன் சன்னியாசியாயிருந்தாலும் அவன் சவபசனைக்காட்டிலும் அதமனென்று விஷ்ணுபக்தியில்லாத * பிராம்மணனைக்கூறியிருப்பதால் முன்வாக்யத்திலுள்ள தவிஜபதத்திற்கு

* "ச்வபசோபி விஷ்ணுபக்த:" என்கிற ஸமபிவ்யாஹாரத்தாலே "ஸித்தம்ஸாத்யாயோபயுஜ்யதே" என்று ச்வபசத்வம் விஷ்ணுபக்தோபயோகி என்று லபிக்கையாலும், "விஷ்ணுபக்தி விஹீநஸ்துயதி:" என்கிற ஸமபிவ்யாஹாரத்தாலே விஷ்ணுபக்தி விஹீநத்வம் யதித்வஹேதுகம் என்று லபிக்கையாலும் .." என்று ஸ்ரீ. உ. வே. அண்ணவையங்கார்ஸ்வாமி அருளிய அரும்பதம் இங்கறியத்தக்கது.

இந்த விஷ்ணுபக்தியென்பதற்குப் பகவத்ஸம்பந்தமாய் பாகவதசேஷத்வம் வரைபொருள். இந்தப் பாகவதசேஷத்வத்திற்கு ச்வபசத்வம் அநுகூலமாயும், யதித்வம் பிரதிகூலமாயுமிருத்தலால் ச்வபசத்வம் விஷ்ணுபக்திக்குக் காரணமென்றும், யதித்வம் விஷ்ணுபக்தியின்மைக்குக் காரணமென்றும் அருளிச்செய்தார். மேலும் யதித்வம் தத்சேஷத்வ விரோதியன்றாகிலும் ததீய பர்யந்த சேஷத்வரூப ததநந்யார்ஹசேஷத்வ விரோதியாகையாலும் என்று அருளிச்செய்திருப்பதால் பகவத்சேஷத்வம் இரண்டிடத்திலும் ஸமமாயினும் பாகவத சேஷத்வரூபமான பகவதநந்யார்ஹ சேஷத்வத்திற்கு யதித்வம் விரோதியாயிருப்பதால் அது தாழ்ந்ததென்றும் ச்வபசத்வம் அதற்கு (பாகவதசேஷத்வத்திற்கு) அநுகூலமாயிருத்தல்பற்றி இது உயர்வென்றும் கருத்து.

* பிராம்மணரல்லாதாருக்கு யதிசப்தப்ரயோகமின்மையால் யதிசப்தத்திற்குப் பிராம்மணனென்று பொருள் கொள்ளப்பட்டது.

(29) நிக்ருஷ்ட ஜன்மத்தால் வந்த தோஷம் சமிப்பது விலக்ஷணஸம்பந்தத்தாலே.

(30) ஸம்பந்தத்துக்கு யோக்யதையுண்டாம்போது ஜந்மக் கொத்தை போகவேணும்.

விஷ்ணுபக்தியுள்ள பிராம்மணனென்றே பொருள்கொள்ளவேண்டும். இப்படிக்கொள்ளாதபக்ஷத்தில் பின்வாக்யம் வியர்த்தமாம். ஏனெனின்; விஷ்ணுபக்தியுடைய சுவபசன் அஃதில்லாத பிராம்மணனைக்காட்டிலும் உயர்ந்தவன் என்றால் விஷ்ணுபக்தியில்லாத பிராம்மணன் அஃதுடைய ச்வபசனைக்காட்டிலும் இழிந்தவன் என்னும் அர்த்தம் தானேகிடைப்பதால் பின்வாக்யத்திற்குப்பிரயோஜனமில்லை மறுபடியும் அதேஅர்த்தத்தைக்கூறின், கூறியது கூறலென்னும் குற்றமுண்டாம்பிரகரணத்திற்கும் பொருந்தாது. ஆகையால் விஷ்ணுபக்தியுடைய ச்வபசன் அஃதுடைய பிராம்மணனைக்காட்டிலுமுயர்ந்தவனென்று முன் வாக்யத்திற்குப் பொருள் கூறின் யாதொரு தோஷமுமில்லை.

ஆனால் உயர்விற்குக்காரணமாகிய விஷ்ணுபக்தி இரண்டிடத்திலும் சமமாகவிருப்பதால் ச்வபசனுக்கு உயர்வு யாது காரணம்பற்றிவரும் என்னும் சங்கையுண்டானல் அது (உயர்ந்த ஜன்மம்) ஸதோஷமும், இது (தாழ்ந்த ஜன்மம்) நிர்தோஷமுமாயிருப்பதேகாரணம். இதுவிஷயத்தைதுலாசிரியர் முன்வாக்யங்களால்நிரூபித்துள்ளார். இன்னும் உத்க்ருஷ்டஜன்மம் விஷ்ணுபக்திதோன்றுதற்குரிய நிலமாதலால் அஃதுண்டாவது இயல்பு. அபக்ருஷ்டஜன்மம் விஷ்ணுபக்திக்குரிய நிலமில்லாமையாலே அஃதுணடாவது அரிது. ஆகையால் இதுவும் உயர்வுக்குக்காரணமாகக்கொள்ளலாம்.

(29) இதுவரை இழிந்தஜன்மமின்னதென்றும்,உயர்ந்தஜன்மம் இன்னதென்றும் நிச்சயிக்கப்பட்டன. இனி, இழிந்தஜன்மத்தால் வந்ததோஷம் ஒழிவதற்குக்காரணம் யாதென்னும் சஙகையுணடாக அதன் காரணத்தையருளிசசெய்கின்றார் "நிக்ருஷ்ட" என்று தொடங்கி.—

நிக்ருஷ்டஜந்மத்தால் வந்ததோஷமென்றது அஹங்காரத்தின் காரணமாகையாலே இழிந்ததான ஜந்மத்தால் வந்தநைச்சியம் பாவிக்கவேண்டுகை முதலான தோஷம் என்றவாறு. சமிப்பது என்றது வாஸனையோடு ஒழிவது என்றவாறு. விலக்ஷண ஸம்பந்தத்தாலே என்றது ஜந்மத்தோடே கூடினநைச்சியத்தையுடையராய் உபாயாந்தரான்வய யோக்யதை சிறிதுமின்றிக்கேயிருக்கும் பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருக்கையாகிற சேஷத்வஸம்பந்தத்தாலே என்றவாறு. இவ்வாக்யத்தால் பகவத் ப்ராப்திககுக் காரணமான பகவத் ஸம்பந்தததின் ப்ரதிபந்தகத்தைப் போக்கும் உபாயம் கூறப்பட்டது.

(30) அந்தப் பாகவதசேஷத்வரூபஸம்பந்தத்திற்கு யோக்யதையுண்டாவது எப்படி என்ன, அதனை அருளிச்செய்கின்றார்; "ஸம்பந்தத்திற்கு" என்று தொடங்கி.

ஸம்பந்தத்துக்கு என்றது முற்கூறிய பாகவதசேஷத்வரூபமான ஸம்பந்தத்திற்கு என்றவாறு. யோக்யதை யுண்டாகும்போது என்றது அசசம்

(31) ஜந்மத்துக்குக் கொத்தையும் அதுக்குப் பரிஹாரமும் "பழுதிலாவொழுகல்" என்கிற பாட்டிலே அருளிச்செய்தார்.

தொடரும்.

இராகவராமாநுஜ தாஸர்,
மதுரை.

பந்தத்திற்கு; இவன் உரியவனும்போது என்றவாறு. அல்லது அச்சம்பந்தத்திற்கு; * காரியகரத்வ ரூபமானயோக்யதையுண்டாகும்போது என்று கொள்ளிலுமாம். இவ்வர்த்தத்தினை "பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே யமைகிறுப்போலே" என்று இவர்தாமே அருளிசசெய்திருக்கின்றார். ஜந்மக் கொத்தை கழியவேண்டுமென்றது தன்னுடைய ஜந்மநிஷ்டமான தூரபிமான முதலிய குற்றங்கள் போகவேண்டுமென்றவாறு.

(31) ஜந்மத்துக்குக்கொத்தை யாது? அதற்குப் பரிகாரம் யாதென்னும் சங்கையுண்டாக அவற்றை அருளிசசெய்கிறார்; "ஜந்மத்துககு" என்று தொடங்கி.—

அஃதாவது ஜந்மத்திற்குக் கொத்தையும் அதற்குப் பரிகாரமும் ஈசுவரனால் அஜ்ஞாநம் அந்யதாஜ்ஞாநம் விபரீதஜ்ஞாநம் நீங்கும்படி உயர்ந்த ஜ்ஞாநத்தைப்பெற்று அதனால் தத்வங்களையுள்ளபடியறிந்து, தத்வங்களையுள்ள படியறிந்தவர்கட்கெல்லாம் தலைவராயும் பாகவதசேஷத்வததின் எல்லை நிலமாயும், அந்தப் பாகவத சேஷத்வத்தைக்கொண்டே தம்மை நிரூபிக்கும்படியான திருநாமத்தை வஹிக்தவருமாகிய ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் § "பழுதிலாவொழுகல்" என்ற பாட்டிலே அருளிச்செய்தார் என்றவாறு. * அஃதாவது சதுர்முகப்பிர்ம்மா தொடங்கி, தங்கள் வரையுள்ள வம்சபரம்பரையில் ஒருவிதமான தோஷமில்லாதவராய் பலராயிருக்கிற சதுர்வேதிகளே! 'இதிற்கீழ்ப்பட்டதில்லை' யென்று சொல்லும்படி அவ்வளவு தாழ்ந்த குலத்திலே பிறந்தார்களேயாகிலும் என்னேடுண்டான அஸாதாரண ஸம்பந்தத்தையறிந்து அந்த ஜ்ஞாநத்திற்குப் பொருத்தமான அநுஷ்டானத்தையு

---

* காரியகரத்வரூபமான யோக்யதை யுண்டாம்போது—பகவத் ப்ராப்தியாகியகாரியத்தைச் செய்வதற்குரிய யோக்யதையுண்டாம்போது.

§ "பழுதிலாவொழுகலாற்றுப்பலசதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேனும்எம்மடியார்களாகில்
தொழுமினீர்கொடுமின் கொள்மின் என்றுநின்னேடுமொக்க
வழிபடஅருளினய்போல்மதிள்திருவரங்கத்தானே"

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(216-ம் பக்கத்தொடர்ச்சி.)

௯-ம். பாட்டு—வேங்கடங்கள்.

(32) இவ்விடத்தில் பட்டர் ஒரு இதிஹாஸமருளிச்செய்வர். "பண்டு, தலையிலேமயிரின்றிக்கே யிருப்பானொருவன் நெற்பரிமாறாநின்றானாய், அங்கே ஒருவன் சென்று 'மயிரைபபேணாதே நீர் தனியேநின்று பரிமாறாநின்றீர்' என்ன, 'என்றான் நடந்ததீ! என்ன; 'ஒன்றுமில்லை கண்டுபோக வந்தேன்' என்ன, 'ஆகில் ஒரு கோட்டையைக் கொண்டுபோகலாகாதோ என்று எடுத்துவிட, அவன

---

(32) ஒருவன் பகவத் விஷயத்தில் அநுகூலனாயிருக்கப்பெறில் ஸர்வேசுவரன் அவனிடத்திலுள்ள எல்லாப் பாபவினைகளைப்போக்கி விடுதல் மாத்திரமல்லாமல், அப்பாபவினைகளை அவ்வநுகூலன் பகைவன் தலையிலே ஏறிடுகிறான்; என்பது வருணவிருத்தாந்தத்தா லறியலாகும். அஃதாவது.—

"தருணமங்கையைமீட்பதோர்நெறி தருகென்னும்
பொருணயந்துநன் னூனெறியடுக்கியபுல்லின்
கருணையங்கடல்துயின்றனன்கருங்கடனோக்கி
வருணைமந்திரமெண்ணினன்விதிமுறைவணங்கி"

என்றபடி சக்கரவர்த்தித்திருமகன் பிராட்டியாரை மீட்டிக்கொள்வதற்காகக் கடலை அணைகட்டவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி, வருணனை நோக்கி ஏழுநாள்வரை சாஸ்திரமுறைப்படி சரண்புகுந்தனர். அப்பொழுது வருணன் வாராதொழிய, இராமபிரானுக்குச் சீற்றமுண்டாகி அவனைக்குறித்து அஸ்திரப்பிரயோகஞ் செய்தனர். இதுகண்ட வருணன் விரைந்தோடி வந்து இராமபிரானைச் சரண்புகுந்தனன். இராமபிரான் அவன் செய்த குற்றத்தையடியோடு மறந்து உனக்கு விரோதிகள் யார் என்று வினவி அவ்வம்பை மருகாந்தாரத்தில் பிரயோகித்தனர். "வருணன்பேரில் தொடுத்த அம்பை மருகாந்தாரத்தில் விட்டாப்போல" என்று லோகதேசிகன் அருளியதும் இங்கறியத்தக்கது. நாம் முன்பு எவ்வளவு பிழை செய்திருந்தாலும் இப்பொழுது அநுகூலர்களாகிவிடுவோமானால் நாம் முன்பு செய்த குற்றங்களை எம்பெருமான் சிறிதும் கருதமாட்டான் என்பதை நன்றாய் விளக்கிக் காட்டுவதற்காகப் பட்டர் இந்த நகைச்சுவையுள்ள வரலாற்றை அருளிச்செய்தார். தன்னை வைதவனைத் தண்டிப்பதற்காக வந்த மொட்டைத்தலையன் அவன் துதிமொழியைக்கேட்டவுடன் அவன் வசவினைமறந்து அவனுக்கு மற்றொரு கோட்டை நெல்லைக் கொடுத்ததுபோல, வருணன் பிழை செய்ததற்குச்

தைக்கொண்டு வாராநிற்கச்செய்தே, எதிரே ஒருவன்வந்து, இதெங்கேபெற்றது' என்ன, 'உன்றன் மொட்டைத்தலையன் தந்தான்,' என்றானாய் அவன் அதைச்சென்று அங்கே 'இன்னானும்மை வைது போகா நின்றான்!' என்ன, 'அடா! என்னெல்லையுங்கொண்டு என்னையும் வைதுபோவதே' என்று தொடர்ந்து வந்தானாய், அவன் புரிந்து பார்த்து 'ஏன்றான் குழல்களலையவலைய ஓடிவாராநின்றதி!' என்ன, 'ஒன்றுமில்லை; இன்னமொரு கோட்டை கொண்டுபோகச் சொல்லவந்தேன் என்றானாய்; அப்படியே கடலை முகங்காட்டுவித்துக்கொள்கைக்காகக் காலைப்பிடிப்பது கோலைத்தொடுப்பதாகாநிற்க, அவன் வந்து முகங்காட்டினவாறே 'உனக்கம்பு தொடுத்தோம்'என்ன லஜ்ஜித்து, 'உன்விரோதிகளைச்சொல்லு நாமிதைவிட என்றாரிறே''.

(33) ஸ்ரீ புருஷோத்தமமுடையானுக்கு ராஜபுத்திரன் செண்பகப்பூக்கொண்டு சாத்தின கதையை நினைப்பது. அஃதாவது ஸ்ரீ புருஷோத்தமமுடையான் செண்பகமுகந்து சாத்துவர்; சில ராஜ புத்திரர்கள் செண்பகங்கொண்டு சாத்தத்தேடி, முன்பே பூவெல்

சீற்றங்கொண்டு அம்பைத்தொடுத்த சக்ரவர்த்தித்திருமகன் அவன் வந்து சரண்புகுந்தவுடன் அவன் பிழையை மறந்து அவனுக்கு நன்மையைச் செய்தனர். இதனால் குற்றஞ்செய்தவன் நல்வழிப்படுவனேல் எம்பெருமான் அக்குற்றங்களை மறந்துவிடுவான் என்பது பெறப்படும். ''அரங்கனுபபித்தன்'' என்பதும் இங்கறியத்தககது. காலைப்பிடிப்பது-சரண்புகுவது. கோலைத்தொடுப்பது--அம்பைத்தொடுப்பது.

(33) இவ்வரலாறு அரும்பதத்தில் நன்றாக விளக்கப்பட்டுளது. அது வருமாறு.—''ஸ்ரீபுருஷோததமத்திலே கடைவீதியிலே ஒரு ராஜபுத்திரனும் செட்டிப்பிள்ளையுமாக ஒரு துவாதசிநாள் அந்தியம்போதாகக் கூடவாராநிற்க, ஒரு கடையிலே ஒரு செண்பகப்பூவைக்கண்டு 'இது ஸ்வாமிக்காக வேணும்' என்று 'இது நான் கொண்டு சாத்துவன்' 'நான் கொண்டு சாத்துவன்' என்று ஒன்றுக்கொன்று சொல்லி அவன் 'ஒரு காசு கொடுக்கிறேன்' என்ன, 'நான் இரண்டு காசு கொடுககிறேன்' என்ன இங்ஙனமே கோடி தனத்தளவாக ஏற்ற அவ்வளவிலே செட்டிப்பிள்ளை இளைத்துக் கைவாங்க, ராஜபுத்திரன் தனமுடையவனுகையாலே அந்தத் திரவியததிற்கு அந்தப் பூவைக்கொண்டு ஸ்ரீபுருஷோத்தமமுடையானுக்குச சாத்த: அவனும் அவ்வளவிலே திருவுள்ளமுகந்து 'ராஜபுத்திரன் நமக்காதாரத்தோடேயிட்ட பூச்சுமக்கவொண்ணகிறதில்லை' என்று ஸ்வப்பனத்திலே திருவுள்ளமாயருளினாராம்'' [ஸ்ரீ புருஷோத்தமம்—ஜகநாத க்ஷேத்ரம். ஸ்ரீ புருஷோத்தமமுடையான்—அந்த க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான்.]

லாம் விற்றுப்போய் ஒரு பூவிருந்தது கடையிலே; அப்பூவுக்குச் செருக்காலே ஒருவர்க்கொருவர் த்ரவியத்தைப்போரவேற்றி இவர்களில் ஒருவன் நினைக்கவொண்ணாதபடி திரவியத்தைப்போர இட்டுக்கொண்டுவந்து சாத்தினான்; அன்றிரா அவன் ஸ்வப்பநங் காண்கிறான்; நீயிட்ட பூவெனக்குக் கனத்துச் சுமக்கவொண்கிறதில்லை' என்றருளிச்செய்தார்.

ரு-ம். திருவாய்மொழி—மொய்ம்மாம்பூம்பொழில்.
அ-ம். பாட்டு—வார்புனல்.

(34) வைஷ்ணவர்கள் அங்கீகாரம் பெறுமதிலும், அவைஷ்ணவர்கள் 'இவன் நமக்குடலல்லன்' என்று கைவிடுகைதான் உத்தேசியமாயிருக்குமிறே; ராவணன் "[illegible]" "த்வாந்துதிக்குலபாம்ஸநம்" என்றது தன்னையுத்தேசியமாகநினைத்திருந்தானிறே விபீஷணாழ்வான்; மிளகாழ்வான்வார்த்தை—ராஜா அகரம்வைக்கிறானாய் அங்கே செல்ல, 'உமக்குப்பங்கில்லை' என்ன, 'அதுவென், வேத பரீக்ஷைவேணுமாகில் அதைச்செய்வது, சாஸ்திரபரீக்ஷை வேணுமாகில் அதைப்பரீக்ஷிப்பது' என்ன, 'உமக்கவையெல்லாம் போதும், அதுக்கும்மைச் சொல்லவொண்ணாது' என்ன, 'ஆனாலெனக்குக்குறையென்' என்ன, 'நீர் வைஷ்ணவரன்றோ, ஆகையாலேகாண்' என்ன, புடைவையை முடிந்தெறிட்டுக் கூத்தாடினானாயிற்று; தன்னையவர்கள் கைவிட்டதுக்கு. ப்ராதிகூல்யஸ்யவர்ஜநமேயிறே வேண்டுவது.

தொடரும். ப. அ.

---

(34) "பித்தரென்றேபிறர்கூற" என்றவிடத்தில் இவ்வாறுரைக்கப்பட்டுளது. ஸ்ரீவிபீஷணாழ்வான் இராவணனுக்கு நற்புத்திகூறிவருகிறவிடத்தில், அதுதானே அவனுக்கு விரோதமாகத்தோற்றிக் கடுஞ்சினங்கொண்டு, "அந்யஸ்த்வேவம்விதம் ப்ரூயாத வாக்யமேதந்நிசாசர, அஸ்மிந்முஹூர்த்தேநபவேத் த்வாம்துதிக்குலபாம்ஸநம்" என்றான். இதன் பொருளாவது.—இராக்ஷஸ! வேறொருவன் இந்த வாக்யத்தைக் கூறுவானேயானால் இந்த க்ஷணத்தில் இறந்துபடுவான். இராக்கதகுலத்தில் தள்ளுணட உன்னைப்பற்றி யவதயுணடாகுக; என்பதாம். அவைஷ்ணவர்கள் தாமேகைவிடுவதும் உத்தேசியமாகுமென்பதற்குச் சிஷ்டாசாரம் காட்டுகிறார்; மிளகாழ்வான் விருத்தாந்தத்தாலே. மிளகாழ்வான்—எல்லாச் சாஸ்திரங்களிலும் வல்லுநர். ராஜா அகரம் வைக்கிறானென்றது ராஜா வித்வான்களைச் சாஸ்திர பரீக்ஷைசெய்து அவரவர்கட்குத் தகுதியாக வீட்டைச் சம்மானங் கொடுக்கிறானெனறவாறு. [அகாம்—வீடு] உமக்கவையெல்லாம்போதும் என்றது உமக்கு அந்தச் சாஸ்திரங்களெல்லாம் நன்றாய் வரும் என்றவாறு. அதுக்கும்மைச் சொல்லவொண்ணாது என்றது அந்தச சாஸ்திரவிஷயத்தில் உமக்கொப்பு பிறரொருவரையுஞ் சொல்லவொண்ணாது என்றவாறு. ப்ராதிகூல்யவர்ஜநம்—அநுகூலமில்லாதவர் தன்னை விடும்படிதானவர்களை விடுதல்.

முடையராகில் நீங்கள் அவர்கள் காலிலே விழுந்து ஆராதியுங்கள்; அவர்கள் உங்களிடத்தில் ஜ்ஞாநத்தை விரும்பினால் ஆதரித்துச் சொல்லுங்கள்; அவர்கள் உங்களுக்குப் பகவத் ஜ்ஞாநத்தை யுபதேசிக்கில் கேட்டு உஜ்ஜீவியுங்கள்; எனக்குமேல் பூஜ்யரில்லாமையாலே என் மாத்திரமாகிலும் அவர்களை ஆராதித்து நல்வழியடையுங்கள்; என்று இந்தப் பரம ரஹஸ்யத்தை பரமாப்தரான தேவரீர் அருளிச்செய்தபின்பு இதில் ஒரு சம்சயமுண்டோ? இப்படி உபதேசமாத்திரமாய்ப் போகாதே கோயிலிலே வந்தருளி லோகசாரங்க மாமுநிவரர் தலையிலே திருப்பாணாழ்வாரை வைத்து இவ்வர்த்தத்தை அநுஷ்டித்துக் காட்டினீரன்றோ! என்பதாம்.

இவ்வாறு மணவாளமாமுனிகள் பாட்டின் கருத்தை விளக்கியதுடன், * "அபிஜாதயபிமானம் ஜந்மக்கொத்தை ‡ அந்த துரபிமானமில்லாத அந்த விலக்ஷணரான ததீயரளவில் பண்ணும் அநுவர்த்தனவிசேஷம் அதுக்குப் பரிஹாரம்" என்று அருளிச்செய்துள்ளார். இந்த "பழுதிலாவொழுகல்" என்ற பாசுரத்தில் 'நின்னொடுமொக்கவழிபடவருளினாய்' என்று § ஈசுவரன் அருளிச்செய்ததை ஆழ்வார் அநுவதிக்கின்றாராதலால் இது அநுவாதமென்றறியத்தக்கது.

---

* அபிஜநாத்யபிமானம் ஜந்மக்கோத்தை என்றது நான் ஜந்மாதிகளால் உயர்ந்தவன் என்று ஜந்மாதியின் உயர்வினை விஷயஞ்செய்யும் ஜ்ஞாநரூப அபிமானம் ஜந்மத்துக்குக்கோத்தை என்றவாறு.

‡ அந்த துரபிமானமில்லாத அந்த விலக்ஷணரான ததீயாளவில் பண்ணும் அநுவர்த்தந விசேஷம் அதற்குப் பரிஹாரம் என்றது அந்த துரபிமான முதலியவற்றுக்குக் காரணமின்மையான் அதனால் ஸ்வரூபயாதாத்மிய ஜ்ஞாநத்திற்கு அநுகூலமாயிருக்கின்ற தாழ்ந்த ஜந்மங்களிற் பிறந்த பாகவதர்களிடத்தில் ப்ரீதிரூபமாகச்செய்யும் சேஷவிர்த்தியே அதற்குப்பரிகாரம் என்றவாறு.

§ "பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்" "பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபிவர்த்ததே; தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதாஹ்யஹம்" (ஸ்ரீவராகநாயனார் அருளியது.)

இதன் பொருளாவது.— எட்டுவிதமான இந்த பக்தியானது எந்த ம்லேச்சனிடத்திலுமிருக்கின்றதோ அவன் பொருட்டு அபேக்ஷிதார்த்தங்களைச் சொல்லவேணும். அவ்வாறே அவனிடத்தில் விசேஷார்த்தங்களிருந்தால் க்ரஹிக்கத் தகுந்தது. அப்படிப்பட்டவன் நான் எப்படியோ அப்படியாவது பூஜிக்கத்தக்கவனாவான்; என்பதாம்.

ஸ்ரீ:

சென்னை ஸ்ரீவைஷ்ணவ கான்பிரன்ஸ்.

(ஐந்தாமாண்டு.)

சென்ற நான்கு வருஷகாலமாக சென்னையில் ஸ்ரீவைஷ்ணவ மஹாசங்கமானது மிகவும் விமரிசையாக நடைபெற்று வருகின்றதை யாவருமறிவர். ஒவ்வொரு வருஷத்திய மஹாசங்கமும் ஒவ்வொரு திவ்யதேசத்திலும நடத்தி வைஷ்ணவஸமயத்தை நன்றாய்ப் பரவச்செய்யவேண்டுமென்பது இந்தச சங்கத்தார்களின் முக்ய நோக்கமாகும். இவர்களின் கருத்திற்கேற்ப இவ்வருஷத்தில் திருச்சிராப்பள்ளி நம்பிள்ளை ஸபையார்களின் முக்ய ப்ரயத்தனத்தாலும், திருபபுறம்பயம் ஸ்ரீமாந் T. D. ராமஸ்வாமி நாயுடுகாருவின் நன்முயற்சியாலும் திருவரங்கம் பெரியகோயிலில் நிகழும் பிரமோதூதஸூ மார்கழிமீ 15, 16, 17உ (30—12—30, 31—12—30, 1—1—31)உகளில் திருப்பாப்புலியூர் ராவ்பகதூர் ஸ்ரீமாந் R. K. வேணுகோபால நாயுடுகோரு (B. A. B. L. M. L. C.) அக்ராஸநாதிபத்தியத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும். அந்த மஹாசங்கத்தில் உபந்யாஸஞ் செய்தற்குரியவர்கள் 20—12—30 உக்குள் கீழ்க்குறிப்பிடபபெறற சங்கக்காரியதரிசியவர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

K. வெங்கடசாமி நாயுடுகாரு,
B. A. B. L.
ஸ்ரீவைஷ்ணவ மஹாசங்கத் காரியதரிசி,
No. 125, ஆதியப்பநாயக்கன் தெரு,
ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.